janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்


மலர் 86 | 2024 ஜனவரி 21 - ஜனவரி 27 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 42




## இந்தியாவின் முக்கிய 4 சங்கரமடங்களின்

# சங்கராச்சாரியார்கள் மோடிக்கு எதிர்ப்பு!

**அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழா "சாஸ்திரங்களுக்கு எதிராக", "புனிதமான இந்து வேதங்களுக்கு எதிராக" நடத்தப்படுகிறது. சாஸ்திரத்தின் படி மோடி இதை திறக்கவே கூடாது. ஆனால் அதை மீறி மோடி இதை திறந்து வைப்பார். நாங்கள் வேடிக்கை பார்க்க வேண்டுமா?**



■ நிச்சலானந்த சரஸ்வதி



■ அவிமுக்தேஷ்வரனந்த் சரஸ்வதி



■ பாரதி தீர்த்த மகாசன்னிதானம்



■ ஸ்ரீஸ்வரானந்த சரஸ்வதி

குறிப்பாக கோவில் கட்டுமானம் முழுமையடையாததால், இப்போது சிலை பிரதிஷ்டை செய்வதே தவறானது.

அதையும் மோடி செய்வது மிக தவறானது என்று 4 சங்கர்ச்சாரியார்களும் தெரிவித்துள்ளனர்.

சங்கராச்சாரியார் என்பவர்கள் 8 ஆம் நூற்றாண்டில் இந்து துறவியான ஆதி சங்கரரால் நிறுவப்பட்ட இந்து மதத்தின் அத்வைத வேதாந்த பாரம்பரியத்தின் தலைவர்கள் ஆவார்கள்.

இந்த பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக இருக்கும் நான்கு மடங்கள் அல்லது துறவற குழுக்களின் மடாதிபதிகள்தான் சங்கராச்சாரியார்.

ஜனவரி 22 அன்று அயோத்தியில் ராமர் கோவிலில் சிலை பிரதிஷ்டை செய்யும் கும்பாபிஷேகத்திற்கு செல்ல 4 சங்கராச்சாரியார்கள் மறுத்துள்ளனர்.

■ பூரியில் உள்ள கோவர்தன் மடத்தின் பீடாதிபதி நிச்சலானந்த சரஸ்வதி,

■ உத்தரகாண்ட் ஜோதிர் மடத்தின் பிரதிநிதி அவிமுக்தேஷ்வரனந்த் சரஸ்வதி

■ சிருங்கேரி சங்கராச்சாரியார் ஸ்ரீ பாரதி தீர்த்த மகாசன்னிதானம்,

■ துவாரகா சாரதா பீட சங்கராச்சாரியார் ஸ்ரீஸ்வரானந்த சரஸ்வதி

ஆகிய நான்கு மடங்களின் சங்கராச்சாரியார்களும் முதல்முறையாக மோடிக்கு எதிராக திரும்பி உள்ளனர்.

இந்து மத சாஸ்திரப்படி, சனாதானத்தின் படி மோடிக்கு சிலையை வைக்கும் அதிகாரம் இல்லை.

அதை மீறி அவர் வைப்பதை இவர்கள் விரும்பவில்லை என்பதால் நாட்டின் நான்கு முக்கிய சங்கர்ச்சாரியார்களோ அல்லது மதத் தலைவர்களோ அந்த நிகழ்ச்சிக்கு செல்ல மாட்டார்கள் என்றும் அவர் அறிவித்து உள்ளார்.

### சிவா வழிபாடு!

குறிப்பிடத்தக்க வகையில், ஆதி சங்கரரும் அவரது மடங்களும், சைவம் இந்துக் கடவுளான சிவன் வழிபாடு மற்றும் சக்தி, இந்து தெய்வம் சக்தியின் வழிபாடு ஆகியவற்றை மட்டுமே மேற்கொண்டு வந்தது.

இருப்பினும் இது வைணவம் பற்றிய கருத்துக்களை போக போக ஏற்றுக்கொண்டது.

இந்து கடவுள் விஷ்ணு மற்றும் ராமர் உட்பட அவரது பல்வேறு அவதாரங்களை வழிபடுதல் அதன்பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில்தான் ராமர் கோவில் வழிபாட்டிற்கு செல்ல மாட்டோம் என்று அறிவித்துள்ளனர் சங்கராச்சாரியார்.

### மோடி கலந்து கொள்கிறார்!

பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 22 ஆம் தேதி ராமர் கோவிலில் நடைபெறும் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆலயம் முற்றிலும் நாட்டின் பாரம்பரிய மற்றும் உள்நாட்டு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளது.

பாரம்பரிய நாகரா பாணியில் கட்டப்பட்ட கோயில் வளாகம், 380 அடி நீளம் (கிழக்குமேற்கு திசை), 250 அடி அகலம் மற்றும் 161 அடி உயரம் கொண்டது.

கோயிலை கட்டி முடிக்க இன்னும் 2 ஆண்டுகள் ஆகும் என்று கோயில் நிர்வாகமே ஒப்புக்கொண்டது.

அப்படியானால், ஜனவரி 22ம் தேதி அதைத் திறந்து வைக்க அவர்கள் ஏன் அவசரப்படுகிறார்கள் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். கட்டுமானம் முடியும் வரை ஏன் காத்திருக்கக்கூடாதா? என்று கேட்கலாம்.


ஆனால், இன்னும் 3 மாதங்களில் லோக்சபா தேர்தல் வருகிறதே. இன்னும் 2 ஆண்டுகள் கழித்து எப்படி ஓட்டுக் கேட்பது...? அதனால்தான் அவசரம்.

இந்த ராமர், அனுமார், பக்தி, புடலங்காய் எல்லாம் அவர்களுக்கு மதம் மீது இருக்கும் பற்றுதலால் அல்ல, அரசியல் மட்டுமே.

அரைகுறையா கோயில் கட்டி அதுல சிலையை பிரதிஷ்டை பண்ணா ஆகம சாஸ்திரப்படி என்ன ஆகும் தெரியுமொ?!

---

## ஜன.18 ஜீவா நினைவு நாள்



நாஞ்சில் தந்த
நற்றமிழ் ஜீவா
நாட்டுக்கு உழைத்த
நமது தலைவர்
நந்தா விளக்கவன்
நம்பிக்கை சுடரவன்
நாட்டின் நலமே
தன்னலன் என்றவன்
காகிதத்தாலே ஆயுதம்
படைத்தவன்
தாமரை ஜனசக்தி உயிர்
மூச்சென கொண்டவர்

கையினை கொண்டு
மெய்யதை போத்தி
வாழ்ந்திட்ட மனிதரைஉய்விக்க
வந்துட்ட உத்தமர் ஜீவா
கம்பன் பாரதி புகழைப்
பாடிய ஜீவா இலக்கிய
பேராசான் ஜீவா புகழை
நாமும பாடுவோம்

-என்.எஸ். பிரதாப் சந்திரன்

---



## கட்சிக் கடிதம்

# நாடாளுமன்ற பொதுத்தேர்தல்



போர்க்குணமிக்க தோழர்களே !

**நாடாளுமன்ற பொது தேர்தலுக்கான காலம் வெகு தொலைவில் இல்லை. பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் தேர்தலுக்காண தேதிகள் அறிவிக்கப்படலாம் என்று தெரிகின்றது.**

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பாக வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திலும் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

தற்போதுள்ள ஒன்றிய அரசு “ஒரே நாடு, ஒரே தேர்தல்” நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்து, முன்னாள் குடியரசு தலைவர் தலைமையில் ஒரு குழுவையும் அமைத்து கருத்து கேட்டு வருகின்றது. பெரும்பான்மையான கட்சிகளும், அமைப்புகளும் இது நடைமுறை சாத்தியமில்லை என்று கருத்து தெரிவித்துள்ளன.

அடிப்படையில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரால் நியமனம் செய்யப்படும் ஒன்றிய அமைச்சர் ஒருவர் என மூவர் கொண்ட கமிட்டி, யாரை அடையாளம் காட்டுகின்றதோ அவர்கள் தேர்தல் ஆணைய உறுப்பினர்களாக அமர்த்தப்படுவார்கள்.

மூவர் கொண்ட குழுவில் பெரும்பான்மை அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் என்று சட்டம் கூறுகின்றது

இச்சட்டம் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது, தடை விதிக்க மறுத்திட்ட உச்ச நீதிமன்றம் விசாரணையை ஏற்றுக் கொண்டுள்ளது.

இன்றைய ஒன்றிய அரசின் முடிவின் படி கமிட்டி அமைத்தால், தேர்தல் ஆணையம் ஜனநாயக முறையில் ஒரு எல்லையோடு சுயேட்சையாக செயல்படும் என்பதற்கான உத்தரவாதம் சிறிதும் இல்லை.

மின்னணு வாக்குப்பதிவில் நம்பிக்கை இழந்து, பழைய வாக்கு சீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும் என்கிற கருத்து மேலோங்கி வருகிறது.

இன்றைய மின்னணு வாக்குப்பதிவில் நம்பகத்தன்மை இல்லை என்ற நிலையில், தேர்தல் ஆணையம் இக்கருத்தை பரிசீலீப்பதற்கு கூட தயாராக இல்லை.

இத்தகைய பல்வேறு பிரச்சனைகளுக்கு நடுவே, நாடாளுமன்ற பொதுத் தேர்தலை நாடு சந்திக்க உள்ளது.

இன்றைய மோடி ஆட்சி கடந்த பத்தாண்டு காலத்தில் தனது அரசு செய்திட்ட சாதனைகளை மக்களிடத்தில் எடுத்து கூறி வாக்கு கேட்க தயாராக இல்லை. சாதனைகள் நிகழ்த்தி இருந்தால் தானே எடுத்து கூற முடியும் !

அல்லது கடந்த தேர்தலில் மக்களுக்கு அளித்திட்ட வாக்குறுதலில் ஒன்று கூட நிறைவேற்றாத நிலையில், நாங்கள் தான் வெற்றி பெறுவோம், மூன்றாம் முறையாக மோடி பிரதமர் பொறுப்பை ஏற்பார் என்று அகம்பாவத்துடன் பேசி வருகின்றனர்.

அகம்பாவத்திற்கு அடிப்படை காரணம் மதம், கடவுள், சாதி என்கின்ற முழக்கங்களை முன்வைத்து தாங்கள் வெற்றி பெறலாம் என்று கருதுகிறார்கள்.

நமது நாட்டில் உள்ள 140 கோடி மக்களில் பெரும்பான்மையினர் இந்துக்கள் என்பது உண்மையே. ஆனால், அவர்கள் ஒருபோதும் மதச்சார்பின்மை கொள்கைகளுக்கு முரணானவர்கள் அல்லர் !

உலகம் போற்றும் மதச்சார்பின்மை கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமல்ல, அதனை உணர்வு பூர்வமாக பின்பற்றக் கூடியவர்கள். சிறுபான்மை மக்கள் நமது நாட்டு குடிமக்கள் ஆவார். நமது சகோதர சகோதரிகள்.

அச்சமின்றி வாழ்ந்திட்ட மக்கள் இன்று மோடி ஆட்சியில், அச்சத்துடன் கூடிய வாழ்க்கையை வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், சீக்கியர், பௌத்தர் என வேறுபாடு இன்றி சகோதர பாசத்துடன் வாழ்ந்து வரும் மக்களை, மதம் என்கின்ற பெயரால் பிளவு படுத்தி, ஒருவரை ஒருவர் மோதச் செய்து, அற்பத்தனமான முறையில் அரசியல் ஆதாயம் தேடும் நோக்குடன் பாஜக ஆட்சி செயல்படுகிறது.

மதம் என்பது மக்களின் நம்பிக்கை பொறுத்தது. அவர்களுக்கு விருப்பமான மதத்தை பின்பற்றுகின்றனர். இதில் அரசியல் தலையீடு என்பது கூடாது என்கிற மிக உயர்ந்த கோட்பாட்டை பாஜக அரசு சிதைத்து விட்டது.

ஒரே நாடு, ஒரே மதம் என்று சிறிதும் வெட்கமின்றி கூச்சலிட்டு வருகின்றனர். மதச்சார்பின்மை கொள்கையில் உறுதி காட்டும் அரசியல் சட்டத்தை அப்புறப்படுத்திவிட்டு, அவ்விடத்தில் தங்களின் மனு தர்மத்தை சட்டமாக்க துடியாய் துடிக்கின்றனர்.

வழிபாட்டுத் தலங்கள் மீது தங்களின் கொடூர தாக்குதலை கொடுத்தனர். பாபர் மசூதி இருக்கும் இடத்தில் தான் ராமர் பிறந்தார் என வதந்தி பரப்பி, பாபர் மசூதியை இடித்து தரைமட்டமாக்கி பெரும் அநீதியை இழைத்தனர்.

அது மட்டுமின்றி தற்போது மதுராவில் உள்ள மசூதியை சுட்டிக்காட்டி, அங்கே தான் கிருஷ்ண பகவான் பிறந்தார். ஆகவே, மசூதி எங்களுக்கு சொந்தமானது என உரிமை கோரி வருகின்றனர்.


பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில், ராமர் கோயில் மூன்று அடுக்குகளை கொண்ட கட்டிடம் கட்ட தீர்மானித்து, அவை முழுமையாக முடிவடையாத நிலையில் அதன் திறப்பு விழா நடைபெறுகிறது.

ஆர். எஸ். எஸ். அதன் அமைப்புகளில் ஒன்றான விஷ்வ இந்து பரிசத் மற்றும் சங் பரிவார அமைப்புகள். மதவெறியை தூண்டும் உள்நோக்கத்துடன் இப்பணியில் ஈடுபட்டுள்ளன.

ராமர் கோயில் கட்டும் இடம் பாபர் மசூதி இடம் மட்டுமின்றி, அருகில் உள்ள இடங்களும் விலைக்கு வாங்கப்பட்டுள்ளன. பாஜகவினர் இவ்விடங்களை முன்கூட்டியே வாங்கி, அதிக விலைக்கு கடவுள் ராமருக்கு விற்று பெரும் லாபம் ஈட்டினர்.

கடவுள் ராமரின் பெயரில் நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பெரும் வசூலில் ஈடுபட்டு பல்லாயிரம் கோடி ரூபாய்களை திரட்டினர்

இவ்வளவு திரட்டப்பட்ட நிதிக்கு ஏதேனும் கணக்கு



உண்டா? என எவரும் கேள்வி எழுப்பிடாமல் ஆகாது.

பி. எம். கேர் நிதிக்கு திரட்டப்படும் நிதிக்கு கணக்கு இல்லை என்கிற போது, ராமன் பெயரால் திரட்டிய நிதிக்கு கணக்கு கேட்க எவருக்கும் உரிமை இல்லை.

கட்டிடப் பணிகள் முழுமை அடையவில்லை, இரண்டு அடுக்குகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அரையும், குறையுமாக கட்டப்பட்ட கட்டிடத்தை தான் ஜனவரி 22ல் நாட்டின் பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார்.

கடவுள் ராமபிரானின் சிலையை மோடி தான் பிரதிஷ்டை செய்ய உள்ளாராம்.

மதச்சார்பற்ற நாட்டின் பிரதம அமைச்சர் முன்னின்று காரியங்களை செய்ய உள்ளார் என்பது நமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய அவமானம் ஆகும்

நாட்டின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இடைக்கால பிரதமர் நந்தா, இந்திராகாந்தி, மொராஜ் தேசாய், ராஜீவ்காந்தி, வி.பி.சிங், சந்திரசேகர் , தேவகவுடா, ஐ.கே. குஜரால், வாஜ்பாய், நரசிம்ம ராவ், மன்மோகன் ஆகிய 14 பிரதமர்கள் ஏற்படுத்தாத அவமானத்தை, ஒட்டுமொத்தமாக நாசக்கார நரேந்திர மோடி ஏற்படுத்தி விட்டார்.

அத்வானி தலைமையில் பாபர் மசூதி இடிக்கப்பட்டு நாட்டின் மதச்சார்பின்மை கொள்கைக்கு அழியா கலங்கத்தையும், அவமானத்தையும் ஏற்படுத்தினர்

அரசியல் வேறு, ஆன்மீகம் வேறு . அரசியல் வேறு, மதம் வேறு. ஆனால், இன்றைய மோடி ஆட்சியில் எல்லாம் ஒன்று என்றுதான் தோல் தட்டுகிறார் மோடிஜி.

ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை, மோடியின் ராமன் சிலை பிரதிஷ்டை செய்யப்படுவதை, ஆன்மீகத்தில் முழு நம்பிக்கையுடைய யாரும் ஏற்கவில்லை.

ஆன்மீகத் துறையில் அரசியல் தலையிடக்கூடாது என்றும், ராமன் பிரதிஷ்டையில் பங்கேற்க மாட்டோம் என்றும் பூரி சங்கராச்சாரியார் சுவாமி நிக்க பனந்தா சரஸ்வதி கடும் கண்டனத்தை பகிங்கரமாக வெளியிட்டுள்ளார்.

அரசியல்வாதிகளுக்கு வரம்புகள் உள்ளன. அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் அவர்களுக்கு பொறுப்பு உள்ளது. மத மற்றும் ஆன்மீக களத்தில் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளன. இந்த விதிகள் பின்பற்றப்பட வேண்டும் . அரசியல்வாதிகள் ஒவ்வொன்றிலும் தலையிடுவது பைத்தியக்காரத்தனம் என்றும் சங்கராச்சாரியார் கூறியுள்ளார்.

ஒருவரின் பெயரை பிரச்சாரம் செய்வதற்காக விதிகள் அனைத்தையும் மீறுவது கடவுளுக்கு எதிராக கிளர்ச்சி மற்றும் அழிவின் பாதையில் செல்வதாகும் என்றும், பூரி சங்கராச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

இவர் மட்டுமல்லாது உத்தரகாண்ட் ஜோதிர் மடத்தின் சங்கராச்சாரியார் சுவாமி ஸ்ரீஅவிமுத்தேஷ் வரானந்தா சரஸ்வதி, சிருங்கேரி சங்கரமட சங்கராச்சாரியார் ஸ்ரீ பாரதி தீர்த்த மகா சன்னிதானம், துவாரகா சாரதா பீடத்தை சேர்ந்த சங்கராச்சாரியார் ஸ்ரீ ஸ்வருமானந்த மகராஜ், பூரி கோவர்த்தன மடத்தின் நிச்சலானந்த சரஸ்வதி போன்றோரும் எதிர்த்துள்ளனர்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று குறிப்பிடுவார்கள். ஆனால், இறைவனுக்கு அல்ல, ராமனுக்கு அல்ல, அனைத்தும் எனக்கு என்று மோடி எடுத்துக் கொண்டுள்ளார்.

ராமன் சிலையை பிரதிஷ்டை செய்திட, தனக்கு ராமன் அளித்திட்ட வாய்ப்பு என கூறுகின்றார்.

தோழர்களே, இவை போன்று எண்ணற்ற நிகழ்வுகளை, மோடி ஆட்சியின் அராஜகங்களை, அட்டூழியங்களை, ஜனநாயக விரோத செயல்களை, சர்வாதிகார பாசிச போக்குகளை ஜனசக்தி வாரந்தோறும் விவரித்து வந்திருக்கிறது. ஜனசக்தியை பக்கம் தவறாது தொடர்ந்து படிக்கும் நல்ல பழக்கமுள்ள தோழர்கள் அனைவரும் அறிவார்கள்.

இத்தகைய சூழலில் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் வரவுள்ளது.

நடைபெறவிருக்கின்ற தேர்தல் வழக்கமான ஒன்றல்ல, நாம் நம்முடைய வாழ்நாளில் பல தேர்தல்களை சந்தித்துள்ளோம். பல வெற்றிகளை மட்டுமல்ல, நம் கட்சி பல சோதனைகளையும் சந்தித்துள்ளது. தோல்விகளையும் சந்தித்துள்ளோம். பல்வேறு அவமானங்களையும் எதிர்கொண்டுள்ளோம். பல பல படிப்பினைகளை பெற்றுள்ளோம்.

இவை அனைத்தையும் கணக்கில் கொண்டு, எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ள நாம் ஆயத்தமாவோம்.

நடைபெற உள்ள தேர்தலில் வெற்றி , தோல்விகள் ஒருபுறம் இருக்க. நாடு காப்பாற்றப்பட வேண்டும். ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் . சர்வாதிகாரமற்ற, பாசிசமற்ற ஆட்சி அமைந்திட வேண்டும்.

இன்றைய மோடி ஆட்சியை தொடருமேயானால், நாடு என்றும் எதிர் கொள்ளாத மிகப்பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

- ◆ **ஜனநாயகம் என்கிற மிக உயர்ந்த கொள்கை அழிக்கப்படும்.**
- ◆ **சர்வதிகாரம் உச்ச நிலைக்கு சென்று பாசிசம் தலைவிரித்து ஆடும்.**
- ◆ **பல கட்சிகள் இயங்கிக் கொண்டிருக்கிற நாட்டில், ஒரு கட்சி ஆட்சி முறை பிரகடனப்படுத்தப்படும்.**
- ◆ **கருத்து சுதந்திரம் பூண்டோடு அழிக்கப்படும்.**

இத்தகைய பேரபாயங்களை மனதில் கொண்டு தேர்தலை எதிர் கொள்ள நாம் மட்டுமல்ல, நாட்டு மக்களும் கடமைப்பட்டவர்கள்.

கொள்கை ரீதியான ஓர் மகத்தான போரை நாம் நடத்திக் கொண்டுள்ளோம். இப்போர் நம்முடைய சொந்த சுயநலத்திற்கான போர் அல்ல.

நாம் என்றென்றும் நமது சுயநலத்தை முன்வைப்பவர்கள் அல்ல. மாறாக நாடு, நாட்டு மக்கள் என்பதே நமது குறிக்கோளாகும்.

சோசலிச சமுதாயம் ஒன்றே தீர்வு என்ற கொள்கை தான் எதார்த்தமானது.

அத்தகைய கொள்கை வெற்றி பெற நாம் அயராது பாடுபட வேண்டும். பாடுபட்டுக் கொண்டுதான் உள்ளோம்.

அதில் ஒரு பகுதி தான் தேர்தல். தேர்தலை எதிர் கொள்ளவும், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படவும், நமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் உரிய பங்களிப்பை அனைவரும் மேற்கொள்வோம்.

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்

தோழமைமிக்க,

**(இரா.முத்தரசன்)**
**மாநிலச் செயலாளர்**

## ஒரே தேசம், ஒரே தேர்தல் குறித்த உயர்மட்டக் குழுவுக்கு

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பதில்

**ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒரு உயர்மட்ட குழுவை ஒன்றிய அரசு நியமித்துள்ளது. அதன் செயலாளர் டாக்டர் நிரேன் சந்திரா என்பவராவார்.**

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துகளைக் கேட்டு அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு கடிதம் எழுதி இருக்கிறார்

(கடிதம் எண். H. 11019/3/2023-Leg. II (HLC) ஜனவரி 1, 2024 தேதியிட்டது)

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா, ஜனவரி 10ம் நாள், இதற்கு பதில் கடிதம் எழுதியுள்ளார்.**

அதில், "ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கவும் இல்லை; அங்கீகரிக்கவும் இல்லை" என்று கூறிய ராஜா, இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டுக்கு வருவதில் உள்ள பன்முகக் குழப்பங்கள் நிறைந்த பிரச்சினைகளை விரிவாக பட்டியலிட்டு கடிதத்தில் இணைத்து இருக்கிறார்.

விவரம் வருமாறு:

நமது அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது, அதனை வடிவமைத்தவர்கள் நமது நாட்டின் பன்முகத்தன்மையையும், இதற்கு பல முனைகளிலும் தீர்வைத் தேடுவதற்காக சவாலையும் நன்கு அறிந்திருந்தனர். தவிர் உண்மைத்தன்மை இத்தகைய பன்மைத் தன்மை கொண்ட நாட்டில் பொறுப்புள்ள அரசாங்கத்தையும் மக்கள் பிரதிநி தித்துவத்தின் முழுமையான புரிதலையும் அடித்தளமாக கொண்டு தான், நம் நாட்டின் ஜனநாயக முறைமை ஆரம்பமானது.

நமது அரசியலமைப்புச் சட்டம், வாக்குரிமையின் நோக்கத்தை பெரிதும் விரிவுபடுத்தியது. பாலினம், மதம், சாதி, பிறந்த இடம் அல்லது வேறு எந்த வேறுபாடுகளையும் பொருட்படுத்தாமல் 21 வயதுக்கு மேற்பட்ட அனைத்து குடிமக்களுக்கும் (இப்போது 18 வயது) வாக்குரிமை வழங்கியது.

தேசிய மற்றும் உள்ளூர் நாட்டங்களை மதித்து, அவற்றுக்கு இடம் அளிக்கும் வகையில் ல், ஒன்றிய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு இடையே ஒரு தெளிவான அதிகார பகிர்வை வழங்கியது. இந்த அமைப்பில், ஜனநாயக செயல்முறையை வழிநடத்த தொடர்ச்சியான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் தேவைப்பட்டன. இதன் காரணமாக அரசியலமைப்புச் சட்டத்தின் 324 வது பிரிவிலிருந்து நேரடியாக அதிகாரத்தைப் பெறும் நிரந்தர, சுதந்திரமான அமைப்பாக இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது.


நமது தற்போதைய தேர்தல் முறையில், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள், சட்டசபையின் நம்பிக்கையை பெற்றிருக்கும் வரை அல்லது தங்கள் பதவிக்காலம் முடியும் வரை, அதாவது 5 ஆண்டுகள் வரை, பதவியில் தொடர உரிமை உண்டு. நமது அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது, டாக்டர் அம்பேத்கரும் மற்ற தலைவர்களும் நிலைத்தன்மையை விட, அரசு பொறுப்புள்ள தன்மையுடன் இருப்பதை விரும்பினர்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்ற திட்டமானது, மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்களில் வெளிப்படுத்தப்பட்ட பல்வேறு மாநில மக்களின் கருத்தையும், நாடாளுமன்ற மக்களவைக்கான



தேர்தல்களில் வெளிப்படுத்தப்பட்ட ஒன்றிய அரசு குறித்த மக்களின் கருத்தையும் ஒருங்கிணைக்க முயற்சிக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் அரசியல் கட்சிகள் மக்களைச் சந்திக்கும் என்பதால் அவற்றின் கடமைகளும் தமது செயல்களுக்கு பொறுப்பேற்பதும் வெகுவாக பாதிக்கப்படும். ஒரே தேர்தல் என்பதை கடைப்பிடித்தால், நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் மக்களவை கலைக்கப்பட்டாலும் அல்லது மக்களவையில் நிலையான பெரும்பான்மை தனிக்கட்சிக்கோ அல்லது




ஒரு கூட்டணிக்கோ கிடைக்காவிட்டாலும், அனைத்து மாநிலங்களிலும் சட்டப்பேரவைகளுக்கு தேர்தல் நடத்தியாக வேண்டும். மாநிலத்தில் நிலையான ஆட்சி அமைந்திருந்து அதை கலைப்பதற்கான எந்த தேவையும் இல்லாத நிலையிலும், அங்கு ஆட்சி கலைப்பு செய்வது அவசியமாகிவிடும்.

இது மாநிலக் கட்சிகளுக்கு மக்கள் அளித்த ஆணையை அவமதிப்பதாகவும், பிரதிநிதித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படைகளுக்கு எதிரானதாகவும் உள்ளது.

நமது குடியரசு பதவியேற்ற பிறகு, சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல்கள் ஒன்றாக நடத்தப்படுவதாக வாதிடப்படுகிறது. ஒரே நேரத்திலான தேர்தல் என்ற சுழற்சி ஏன் முதலில் உடைந்தது என்பதை நாம் சற்று சிந்திக்க வேண்டும். 1957ல் இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு கேரளாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைத்த ஆட்சியும் இதற்கு ஒரு காரணம். கேரளாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அமைச்சரவை, அரசியல் சாசனத்தின் 356 வது பிரிவின்கீழ் முதல் பலியாக கலைக்கப்பட்டது.

மூன்றாவது பொதுத் தேர்தல் 1962ல் நடப்பதற்கு முன்பாகவே, 1960ல் கேரள சட்டப்பேரவைக்கென தனித் தேர்தல் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையும், தனது பதவி காலத்தை நிறைவு செய்வதற்கு முன்பாகவே கவிழ்ந்ததால், 1965 இல் மறுபடியும் நாடாளுமன்றத் தேர்தலோடு தொடர்பு இல்லாமல் மற்றொரு சட்டப் பேரவை தேர்தல் நடத்தப்பட்டது.

அந்த தேர்தலுக்குப் பின்பும் எந்த கட்சியும் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாததால், 1967ம் ஆண்டு பொதுத் தேர்தலுடன் மீண்டும் சட்டப்பேரவைக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல் ஜனநாயகத்தின் தன்மை மற்றும் மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திய விதம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த செயல்முறை இயல்பாக நடந்துவிட்டது. மக்களவைத் தேர்தலுடன் மாநில சட்டப் பேரவைத் தேர்தலை ஒத்திசைந்து திணிக்கப்படவுமில்லை அல்லது மறுக்கப்படவுமில்லை.

1967 க்குப் பிறகு, பெரும்பாலான மாநிலங்களில் ஒரு கட்சி ஆட்சிக்கு சவால் விடும் பிற சக்திகள் அரசியல் அடிவானத்தில் தோன்றின. அதுவரை இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்திய கட்சி 8 மாநிலங்களில் ஆட்சியை இழந்தது. 1967 தேர்தல்களின் முடிவுகள் ஜனநாயகம் ஊடுருவி வளர்ந்ததை நிரூபித்தது. மேலும் பல மாநிலங்களில் ஒன்றிய அளவில் உள்ள ஆதிக்கக் கட்சியை விட மக்களின் வளர்ந்து வரும் விருப்பங்களை வழிமொழிந்த அரசியல் கட்சிகள் அதிக இடங்களை பெற்றன.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரே மாதிரியான சுழற்சியில் இருந்து விடுபடும் விருப்பம், ஜனநாயகத்தில் சட்டபூர்வமான வடிவமாகும். கூட்டாட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தில், மக்கள் சபைக்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது, மக்களின் வாக்குரிமை மற்றும் தீர்ப்பின் மீது கட்டுப்படுத்தப்பட்ட விளைவை ஏற்படுத்தும்.

பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு, அரசியலமைப்புச் சட்டத்தின் தோல்வியைக் காரணம் காட்டி குடியரசுத் தலைவரால் 4 மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கொள்கை அடிப்படையில் குடியரசுத் தலைவர் ஆட்சியை எதிர்த்தாலும், மாநிலத்தில் நிர்வாகம் முற்றிலுமாக சீர்கேட்டிருப்பதைக் கண்டு பலர் மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கோரியுள்ளனர். 'ஒரே தேசம், ஒரே தேர்தல்' என்ற திட்டமானது, இத்தகைய சூழலுக்கு எந்த தீர்வையும் காட்ட வில்லை. மாறாக, மாநிலங்களில் ஜனநாயக விரோத தன்மையையே நிலை நிறுத்துகிறது.

'ஒரே தேசம், ஒரே தேர்தல்' விரும்பத்தக்கதாகக் கூறப்படுகிறது ஒரு முக்கிய காரணம் நிதி. தேர்தலை நடத்தும் செலவுகளை ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மிச்சப்படுத்தும் என்பதால், அதிக இது ஒரு முக்கியமான உத்தி என்று சொல்லப்படுகிறது. மாநிலத்தின் தேர்தல் செலவுகள், வாக்குச் சாவடிகள் அமைப்பது, தேர்தல் வேலைகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு பயணப்படி அகவிலைப்படி வழங்குதல், போக்குவரத்து ஏற்பாடுகள், அடையாள மை செலவு போன்றவை, ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தினால் கணிசமாகக் குறையும் அல்லது பாதியாகக் குறையும் என்று வாதிடப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்திய தேர்தல் ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட தரவுகள்,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### வினாடி - வினா

1. ஆர்.எஸ்.எஸ் எத்தனை முறை தடை செய்யப்பட்டது, எப்போது?

2. ஜூலியஸ்பூசிக்தூக்கிலிடப்படுவதற்கு முன் சிறையில் எழுதிய நூலின் பெயர் என்ன?

3. ஐ.நா. பொதுச்செயலாளராக இருந்து, பின்னர் தமது நாட்டின் அதிபரானவர் யார்?

4. தீண்டாமை ஒழிப்புக்கான அரசியலமைப்பு சட்டத்தின் 17வது பிரிவை அரசியல் நிர்ணய சபை எப்போது ஏற்றுக்கொண்டது?

5. காரல் மார்க்ஸ் ஆசிரியராக இருந்து வழிகாட்டிய பத்திரிகையின் பெயர் என்ன?

6. ஆதிச்சநல்லூர் தொல்லியல் ஆய்வில் கிடைத்த நெல்மணிகளின் காலம்?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 42

# பாபா லால்தாஸுக்கு நேர்ந்த கதி!

“புதிய அயோத்தி உருவாகிறது என்கிறார் உபி முதல்வர் யோகி ஆதித்யநாத். பாபர் மசூதி இடிப்புக்கு முன்பு அத்வானி ரத யாத்திரை நடத்திய போது, பாட்னாவில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ஏ பி பரதன் “அயோத்தியில் புனிதமற்ற இடம் எங்கிருக்கிறது என்று சொல்” என்று கேட்டது நினைவுக்கு வருகிறது.

ராமன் பிறந்ததாகக் கூறப்படுவதால் கூட அல்ல, ஆர்.எஸ்.எஸ். மோடி கோவில் கட்டுவதால்தான் புனிதமடைகிறது என்று சொல்வது அயோத்திக்கும் ராமனுக்குமே அவமதிப்பு அல்லவா?

ஜனவரி 16ஆம் தேதியிலிருந்து பூஜை வழிபாடுகள் துவங்கி விட்டன. 22 ஆம் தேதி கோவில் திறப்பு விழாவும், குழந்தை ராமர் சிலையின் பிரதிஷ்டையும் நடைபெறுகின்றன.

அந்த நாளில், கருவறைக்குள் நரேந்திர மோடி, யோகிஆதித்யநாத் ஆகியோரோடு பெண்ணான ஆளுநர் ஆனந்திபென் பட்டேலும் செல்கிறார். பாவம்! நம் ஜனாதிபதி திரௌபதி முர்மு பெயர் இல்லை. காரணம் தெரிந்ததே!

11 ஆயிரம் பேருக்கு அழைப்பு போயிருக்கிறது. பாபர் மசூதி இடிப்புக்கு தலைமை தாங்கிய அத்வானிக்கும், இடித்தவர்களுக்கும் அழைப்பில்லை.

ஆதிசங்கரர் தோற்றுவித்த உத்தர்காண்ட்டில் உள்ள ஜோதிஷ் பீடம், குஜராத்தின் துவாரகா பீடம், ஒரிசாவின் பூரி பீடம், கர்நாடகாவில் சிருங்கேரி பீடம் ஆகிய நான்கு மடங்களின் சங்கராச்சாரியார்கள் இந்த விழாவுக்கு வர முடியாது என்று தெரிவித்து விட்டார்கள். காமகோடி இந்த கணக்கில் இல்லையாம்.

இந்த விழா சனாதன தர்மத்தின் விதிகளை மீறி நடத்தப்படுகிறது.

இது சனாதன தர்மத்தின் வெற்றியை காட்டவில்லை அயோத்தியில் ஏற்கனவே ராமர் கோவில் இருந்தது. இப்போது புதிய கோவில் கட்டுவது மதத்துக்கான வெற்றியோ அல்லது கொடையோ அல்ல என்று பேசுகிறார் ஜோதிஷ் மட சங்கராச்சாரி அவிமுக்தேஸ்வரானந்த்.

வேறு சாதியினர் கருவறைக்குள் நுழைந்தால் ஆகம விதி கெட்டுவிடும். அனைத்து சாதியினரும் அர்ச்சகராவது ஆகம விரோதம் என்றுதான் சங்கப் பரிவாரங்கள் இதுவரை சங்கூதின.

சூத்திரரான நரேந்திர மோடி அயோத்தியில் ராமர் சிலையை தொட்டு பிரதிஷ்டை செய்வது நாட்டுக்கு நல்லதல்ல என்றுதான் இப்போதும் சொல்கிறார் பூரி சங்கராச்சாரியார்.

அதை ஆர்எஸ்எஸ் பரிவாரம் ஏற்காது. அதைப் பொருத்தவரை, அதிகாரத்துக்கு வருவதற்கான வழி தான் மதம். எந்த ஆச்சாரியாராக இருந்தாலும் அதிகாரத்துக்கு பிஜேபி வர உதவ வேண்டும், அவ்வளவுதான்.

சங்கராச்சாரியார்களை இப்போது ஆர்எஸ்எஸ் வறுத்தெடுத்துக் கொண்டிருக்கிறது. ‘ராமர் கோவில் வைணவம். சங்கராச்சாரியார்கள் சைவம். உங்களுக்கு இங்கு என்ன வேலை” என்கிறது. இந்துக்கள் எல்லோரும் ஒன்று என்பது மசூதியை இடிப்பதற்கு மட்டும் தானே!

“சங்கராச்சாரியார்கள் மோடியையும் பிஜேபி யையும் அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். மோடியும் பிஜேபியும் எடுத்த முயற்சியால்தான், கோவில் கட்டப்பட்டு கொண்டிருக்கிறது. அவர்கள் ஆசீர்வதிக்க வேண்டுமே தவிர விமர்சனம் செய்யக்கூடாது என எச்சரிக்கிறார் ஒன்றிய அமைச்சர் நாராயணன் ரானே.

பாபர் மசூதிக்குள் வைக்கப்பட்டிருந்த குழந்தை ராமர் சிலையின் அர்ச்சகர் பாபா லால்தாஸ். அவர் “இந்து முஸ்லிம் பகைமை கூடாது. முஸ்லிம்களோடு பேசி நாங்கள் பிரச்சினையை தீர்த்துக் கொள்வோம். இதில் அரசியலை நுழைக்காதீர்கள்” என்று பேசி வந்தார்.

பாபர் மசூதி 1992 டிசம்பர் 6ஆம் தேதி இடிக்கப்பட்ட போது, அதை கண்ணால் பார்த்தவர் பாபா லால்தாஸ். அவர் சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு வரத் தயாரானார். 1993 நவம்பர் 16ஆம் தேதி அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லிவிட்டார்கள்.

நல்லவேளையாக, சங்கராச்சாரியார்களை எச்சரித்ததோடு விட்டிருக்கிறார்கள்.

யார், எதைச் சொன்னாலும் விழா நிறுத்தப்பட போவதில்லை. பல்லாயிரம் முஸ்லிம்களின் உயிரைக் காவு கொடுத்து, தேசத்தை மத வெறியால் பிளந்து, சொன்னதைச் செய்த வெல்லற்கரிய சக்தி என தேர்தலுக்கு முன்னதாக காட்டுவதற்கான விழா இது. கட்டுமானப்பணி நிறைவடைந்ததா? ராமர் பிறந்த நாள் எப்போது வருகிறது? என்று பார்ப்பதெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு அனாவசியம்.


இந்தச் சதி வியூகத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் சரணடைந்து விடும் என்று தான் ஆர்எஸ்எஸ் கும்பல் எதிர்பார்த்தது.

இடதுசாரி கட்சிகள் மட்டுமல்ல, இந்தியா கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளும், பாபர் மசூதி இடிப்பில் கரம் கோர்த்த சிவசேனை உட்பட, இந்த விழாவில் பங்கேற்க மாட்டோம் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்கும் வரவேற்புக்கும் உரியது.

இந்த ஒற்றுமை தொடரட்டும்!

# ஆளுநர் நடவடிக்கை மீது ஆழ்ந்த சந்தேகம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அக்கை



ஆளுநர் நடவடிக்கை மீது – ஆழ்ந்த சந்தேகம் ஏற்படுத்துகிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது.

சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் ஊழல் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு, பிணையில் வெளியே வந்துள்ளார்.

துணை வேந்தர் மற்றும் பேராசிரியர்கள் மீதான குற்றச்செயல்கள் தொடர்பாக காவல்துறை விசாரணை நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக நேற்று (11.01.2024) காவல்துறையினர் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறை மற்றும் கணினி அறிவியல் துறை பேராசிரியர்கள் அலுவலகங்கள் உள்பட 6 இடங்களில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சூழலில் அரசியலமைப்பு அதிகாரப் பொறுப்பில் உள்ள ஆளுநர் “கலந்துரையாடல்” (?!) நிகழ்வுக்காக பல்கலைக் கழகம் வளாகம் சென்றதும், அங்கு குற்றக் கறை படிந்த துணை வேந்தர் உட்பட பேராசிரியர்களை அழைத்து பேசியதும் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

விசாரணை நடந்து வரும் சூழலில் ஆளுநர் வருகை தருவது சரியல்ல என மாணவர், இளைஞர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அலட்சியம் செய்து, அவர்களை கைது செய்து அப்புறப்படுத்திவிட்டு, ஆளுநர் மேற்கொண்ட நடவடிக்கையால் குற்றவாளிகள் தப்பித்து செல்ல, சாட்சியங்கள், ஆவணங்கள் இடம் மாற்றப்படுமோ என ஆழ்ந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் மக்கள் தேர்ந்தெடுத்துள்ள அரசுக்கு, ஆளுநர் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வரும் நிலையில், உச்ச நீதிமன்றத்தில் செய்த முறையீட்டில், ஆளுநர், முதலமைச்சரை சந்தித்து பேசி சுமூக நிலைக்கு திருப்ப வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஆளுநர் அறிவித்த பல்கலைக் கழக துணை வேந்தர் தேடுதல் குழுவை ஆளுநர் ரத்து செய்து, இரண்டொரு நாளில் சேலம் பெரியார் பல்கலைக் கழக நிகழ்வு மீண்டும் எதிர்மறையான திசையில் செல்ல முயற்சிப்பதை வெளிப்படுத்துகிறது.

ஆளுநர் எனும் மாண்புக்கு களங்கம் ஏற்படுத்தும் செயலில் ஈடுபட்டு வரும் ஆர்.என்.ரவியின் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கண்டிப்பதுடன், ஆளுநர் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவர், இளைஞர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற வேண்டும் என தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

தேர்தல் செலவுகள் பற்றிய முழு பரிமாணத்தை வெளிப்படுத்தவில்லை என்பதையும், கவனமாக ஆய்வு செய்யாமல், இதுபோன்ற பொதுவான கருத்துகளை வெளியிடுவது பொருத்தமற்றது என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

உதாரணமாக, ஆந்திரப் பிரதேசத்தில், 2014ல் ஒரே நேரத்தில் மக்களவை, சட்டப் பேரவைதேர்தல் நடந்தபோது, ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு சராசரியாக ரூ. 1.66 கோடி செலவானது. மற்றொரு பெரிய மாநிலமான மத்தியப் பிரதேசத்தில், மக்களவை மற்றும் மாநில சட்டசபைக்கான தேர்தல்கள் தனித்தனியாக நடத்தப்பட்டபோது, இரண்டு தேர்தல்களுக்கும் சேர்த்து மொத்த செலவு ஒரு தொகுதிக்கு ரூ.1.43 கோடிதான்.

ஒரே நேரத்தில் அல்லது தனித்தனியாக தேர்தல் நடத்துவதில், செலவுகள் ஒரு முக்கிய பங்கு வகித்து விடவில்லை. ‘ஒரே தேசம், ஒரே தேர்தல்’ என்பது மக்களின் ஜனநாயக உரிமையைக் குறைக்கிறது என்பதைத் தவிர, மற்ற முறைகேடுகளுக்கு இந்த முறை எந்த தடுப்பையும் வழங்கி விடவில்லை.

மேலும், ‘ஒரு தேசம், ஒரே தேர்தல்’ என்பது நிதிச் செலவுகளை இன்னும் கூடுதலாக்கவும் செய்யும். ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்த, முன்னெப்போதும் இல்லாத அளவில் வாக்குப்பதிவு இயந்திரங்களை வாங்குவது ஒரு பெரிய செலவாகும், மேலும் அவை ஐந்து வருட காலத்திற்கு பாதுகாப்பாக வைத்திருக்கப் படவும் வேண்டும்.

வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தேர்தல் நடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களை, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பயன்படுத்திவிட்டு, பிறகு பூட்டி வைப்பதில் ஒரு நியாயமும் இல்லை. பணத்தைச் சேமிப்பதற்காக மட்டுமே இந்த முறை என்று சொன்னால், அதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை இலக்காகக் கொண்ட விரிவான தேர்தல் சீர்திருத்தங்கள் நமது நாட்டிற்குத் தேவை. அரசியல் கட்சிகளின் செலவுகளை கட்டுப்படுத்த இந்த முறை உதவும் என்று சொல்லவும் வழியில்லை. இந்திரஜித் குப்தா கமிட்டியின் பரிந்துரையின்படி வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்ற மாற்று வழிகளை ஆலோசிக்க வேண்டும்.

தேர்தல் பத்திரங்கள் வடிவில் உள்ள நிறுவனமயமாக்கப்பட்ட ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், மேலும் தேர்தலில் பணபலம் மற்றும் குண்டர் பலத்தையும் குறைக்க சிறந்த சட்டங்களை உருவாக்க வேண்டும்.

‘ஒரே தேசம், ஒரே தேர்தல்’ என்பது வெறுப்பூட்டும் பேச்சின் நிகழ்வைக் குறைக்கும் என்று சிலர் வாதிடுகின்றனர். ஏனெனில் குறைவான பேரணிகள், பரப்புரைகளே சாத்தியம் என்பதால், வெறுப்பு பேச்சின் அளவும் குறைவாக இருக்கும் என்று கருதுவது சரியல்ல. வெறுப்பு அரசியலை, மக்களை பிளவுபடுத்தும் வகையில் அநாகரிகமாக பேசுபவர்களுக்கு கடுமையான தண்டனைகளைப் பரிந்துரைப்பதற்குப் பதிலாக, அரசியல் தலைவர்கள், மக்களிடம் நேரடியாக பேசுகிற வாய்ப்பை பறிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதால் இந்தக் கூற்று கேலிக்கு உரியதாகும்.

ஊடக நிறுவனங்களின் சார்பு நிலை, சுதந்திரமான தகவல் பரிமாற்றத்தை சேதப்படுத்துகிறது. அதனை மாற்றுவதற்கு வழி காணாமல், தேர்தல் முறையை மாற்றுவது பொருத்தமற்றது.

இந்திய சட்ட ஆணையம், இந்த விஷயத்தில் கருத்துகளளைக் கேட்டபோது, ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக இந்திய சட்ட ஆணையத்திடம் எழுத்துப் பூர்வ பதில்கள் சமர்ப்பிக்கப்பட்ட போது, 13 அரசியல் கட்சிகள் இந்த நடவடிக்கையை முற்றிலும் எதிர்த்தன. பதில்களைத் தந்த மொத்தமுள்ள 26 கட்சிகளில் 3 அரசியல் கட்சிகள் இந்த திட்டத்தைப் பற்றி தங்கள் அச்சங்களை வெளிப்படுத்தின. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட 4 தேசிய கட்சிகள் இந்த திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தன. ஒரே ஒரு தேசிய கட்சி மட்டுமே ஆதரவளித்தது.

இது தொடர்பாக மீண்டும் ஆலோசனை நடத்தப்பட்டபோது, 10 அரசியல் கட்சிகள் இந்த நடவடிக்கையை எதிர்த்தன. மீண்டும், சிபிஐ உட்பட 3 தேசிய அரசியல் கட்சிகள் இந்த முன்மொழிவை எதிர்த்தன, ஒரு தேசிய அரசியல் கட்சி மட்டுமே ஆதரவளித்தது.

எனவே தேர்தலில் பங்கேற்கும் இந்திய அரசியல் கட்சிகளிடையே புதிய முறை குறித்து ஒருமித்த கருத்து உருவாகவே இல்லை என்பது தெளிவு.

‘ஒரே தேசம், ஒரே தேர்தல்’ என்ற திட்டம் ஜனநாயகத்தையும், மாநில உரிமைகளையும் பறிக்கிறது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதியோடு வலியுறுத்துகிறது.

‘ஒரே தேசம், ஒரே தேர்தல்’ என்பது ஒரே மாதிரியான கொள்கையை திணிப்பதன் மூலம் கருத்து மாற்றுக் கருத்துகளை அழிக்கும் முயற்சியாகும். இது நாட்டை ஒரு கட்சி ஆட்சிக்கு தள்ளிச் செல்லும். இந்தியாவை ஜனநாயகமற்ற மற்றும் பொறுப்பற்ற அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்ல முயற்சிக்கும். இந்தக் ஒரு தேசம் ஒரு தேர்தல் இன்னும் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக நிராகரிக்கிறது.

**தமிழில் டி.எம்.மூர்த்தி**

# மார்க்ஸ் – எங்கல்ஸ் சூழலியலாளர்களே!



அருண் நெடுஞ்செழியன்

**இயற்கையை வெல்லும்படியான மனித ஆற்றல் மீது மார்க்சும் எங்கல்சும் அளவுகடந்த நம்பிக்கைவைத்தனர் என்றும், வளம் குன்றா வளர்ச்சி மற்றும் சூழலியல் குறித்த எந்த ஆர்வமும் அவர்களிடம் இல்லை என்றும் கற்பிதங்கள் இன்றைய சில சூழலியலாளர்கள் (சில இடதுசாரிகளிடத்திலும் கூட) பரவலாக நிலவுகிறது .**

முன்முடிவுகள் அடிப்படையில் சூழலியல் பாதுகாப்பிற்கு எதிரானவர்களாக மார்க்ஸ் எங்கெல்ஸ் மீது முன்வைக்கப்படுகிற விமர்சனங்களுக்கு மார்க்ஸ் மற்றும் எங்கல்சின் எழுத்துக்களிலிருந்தே அவர்களுக்கான மறுப்புகளை கூற முடியும்.

மேலும் மார்க்சிய மூலவர்களின் எழுத்துககளை வாசிக்காமல் கம்யூனிச எதிர்ப்பு மனநிலையில் மேற்கொள்ளப்படுகிற இத்தகைய பொய்யான கருதுகோள்களை கொண்டு மார்க்சையும் எங்கல்சையும் விமர்சிப்பது ஆக்கப்பூர்வமான விவாதத்திற்கு ஒருபோதும் வழிவகை செய்யாது.

மேலும் இது சூழலியல் நெருக்கடிகளுக்கு காரணியான முதலாளியத்தை நாம் முற்றாக புரிந்துகொள்வதற்கும் உதவாது.


தெய்வீக அருளின்படி இயற்கை விதிகள் அமைகிறது, இயற்கையே தெய்வமெனும் இயக்க மறுப்பியல்வாதிகளான "இறையியல்" சூழல்வாதிகள், சுற்றுச்சூழலின் எதிரியே சூழலை காக்க வந்த மீட்பராக வேறுவடிவில் கிளம்புகின்ற அரசு சார தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த "கார்ப்பரேட்" சூழல்வாதிகள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சியினை கண்ணைமூடிக்கொண்டு ஆதரிப்பவராக ,தொழில்நுட்பத்தால் சூழலியல் சிக்கல்களுக்கு தீர்வழிக்க முற்படும் "விஞ்ஞான" சூழல்வாதிகள் போன்றோர்களை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை!

மார்க்ஸ் மற்றும் எங்கல்சின் சூழல் குறித்த திறனாய்வானது 19 ஆம் நூற்றாண்டு சூழலில் நிலவிய முதலாளித்துவ உற்பத்தி முறையை அடிப்படையாக கொண்டது ஆகும்.முதலாளித்துவத்தின் இன்றைய அசுர வளர்சிக்கும் மார்க்ஸ் எங்கெல்ஸ் வாழ்ந்த காலத்தில் முதலாளித்துவ வளர்ச்சியையும் கவனத்தில் கொண்டு நாம் மார்க்சியத்தின் சூழலியல் குறித்த பார்வையை அணுகவேண்டும்.

அப்படிப் பார்க்கும்போது, அவர்கள் வாழ்ந்த வரலாற்றுக் கட்டத்திலேயே நிலவிய முதலாளிய அமைப்பினால் ஏற்படும் சூழலியல் சிக்கல்களை தங்களது எழுத்துக்களில் எழுதி வந்தார்கள் என்பதை காணும்போது அவர்களின் மேதைமையை என்னவென்று புகழ்வது. குறிப்பாக மார்க்ஸ் காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த மக்கள் தொகை பெருக்கம் பற்றிய மால்த்தூசிய கோட்பாடு மற்றும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி குறித்து டார்வீனிய கோட்பாடு குறித்த அவர்களின் விமர்சனங்கள் ஆழமாக புரிந்துகொள்ள வேண்டியது மட்டுமல்லாமல் பரந்துபட்ட அளவில் விவாதிக்க வேண்டியது அவசியத்தேவையாகும் .

## இயற்கையுடனான மனித உறவு குறித்து:

மனிதன் இயற்கையினால் வாழ்கிறான் அதாவது இயற்கைதான் அவனது உடல் மேலும் அவன் சாகாமல் இருக்கவேண்டுமென்றால் இயற்கையுடன் தொடர்ச்சியாக உரையாடலை மேற்கொண்டு வரவேண்டும். மனிதனின்



பௌதிக / புற மற்றும் அக வாழ்வானது இயற்கையுடன் இணைந்தது என்பதை எளிதாக சொல்வதென்றால், இயற்கை அதனுடையே இணைக்கப்பட்டிருக்கிறது , மனிதன் இயற்கையின் ஒரு பகுதி. (மார்க்ஸ், 1844 ஆம் ஆண்டின் பொருளாதார தத்துவஞான கையேடுகள்)

இயற்கைக்கும் மனிதனுக்குமான உயிரியல் ரீதியான உறவை



இன்று பெரும்பாலோனார் மறந்துவிட்டனர்.கைபேசி,கணினி வருகைக்குபின்னாச்கமனிதர்களிடமிருந்தே மனிதர்கள் அன்னியப்பட்டு தீவு தீவாக வாழ்கின்றனர்.இந்நிலையில் மனிதக்குரங்கிலிருந்து பரிணமித்து வந்த நமது மானுட வரலாற்றையும் மறந்துவிட்டோம்.

கூடவே பூமியின் ஓரங்கம் நாம் என்ற இயற்கை வரலாற்றையும் மறந்துவிட்டோம்.இன்று உலக மக்களை அச்சுறுத்துகிற புவி வெப்பமயமாக்கல்,காலநிலை மாற்றம் போன்ற அனைத்து பிரச்சனைகளுக்கு காரணம் நாம் இயற்கையின் ஓர் அங்கம் என்பதை மறந்துதான் காரணம்.

## காடு அழிப்பு குறித்து:

நாகரிக வளர்ச்சியும் பொதுவாகத் தொழில் வளர்ச்சியும் எப்போதுமே காடுகளை அழிப்பதில்தான் மும்முரமாய் இருந்துள்ளன.காடுகளை அழியாமல் காக்கவும்,அழிந்தவற்றைத் திரும்ப வளர்க்கவும் அவை செய்திருப்பவை எல்லாம் கடுகளவே என்னும் படியாக இருக்கிறது. (மார்க்ஸ்,மூலதனம் பாகம் 2; பகுதி மிமி; அத்தியாயம்-XIII; பிரிவு மிமி உற்பத்திக்காலம்; பக்கம்324)

மத்திய இந்தியாவில் இன்று காடுகளை அழித்து வருகிற அதானியின் தொழில்வளர்ச்சி குறித்து மார்க்சின் மேற்கூறிய வரிகள் தீர்க்க தரிசனம் போல உள்ளது.இந்தியாவிலும் உலகின் வேறெந்த பகுதிகளிலும் சரி கார்ப்பரேட்களின் கண்ணில் வளம் கொழிக்கிற காடுகள் தென்பட்டுவிட்டால் அவர்களது கோடரிகள் வேடிக்கை பார்ப்பதில்லை.

உதாரணத்திற்கு அண்மைய நிகழ்வொன்றை சுட்டிக்காட்டலாம். சத்தீஸ்கர் மாநிலத்தில் அடர்ந்த காடுகளில் ஒன்று ஹஸ்தியோ அரந்த் காடாகும். சுமார் 1,70,000 ஹெக்டேர் பரப்பளவில் அடர்த்தியான மரங்களால் சூழப்பட்டுள்ள இக்காட்டில் 82 வகையான புள்ளினங்களும் 167 வகையான தாவரங்களும் பட்டியிலிடப்பட்டுள்ளன.

இந்திய வனவியல் ஆராய்ச்சி மற்றும் கல்வி கவுன்சிலானது இக்காட்டை "மத்திய இந்தியாவில் பழமையான சால் மற்றும் தேக்கு காடுகளை உள்ளடக்கிய மிகப்பெரிய துண்டாடப்படாத காடு" என்று விவரித்துள்ளது.

ஹஸ்தியோ காட்டில் சுமார் ஐந்து பில்லியன் டன் அளவிலான நிலக்கரி வளம் இருக்குமென நிபுணர்கள் கணித்தனர்.

அவ்வளவுதான், அதானி குழுமம் களத்தில் குதித்தது. 2007 ஆம் ஆண்டில் ஹஸ்தியோ காட்டில் சுரங்கப் பணிகளை கையாள்கிற ஒப்பந்தத்தைப் பெற்ற அதானி நிறுவனம்,2013 ஆம் ஆண்டில் நிலக்கரியை அகழ்ந்து எடுக்கிற சுரங்க அனுமதியை பெற்றது. முதற்கட்டமாக 1882 ஏக்கர் பரப்பளவில் நிலக்கரியை வெட்டி எடுக்கத் தொடங்கிய அதானி நிறுவனம்.

அப்பகுதியில் இருந்த நீண்ட நெடிய மரங்களடங்கிய காட்டை மொட்டையடித்தது. ஒருகாலத்தில் சூரியவெளிச்சம் தொட்டிராத தரைகள்,இன்று மரங்கள் வெட்டப்பட்டு,பள்ளம் தோண்டப்பட்டு பெரும் பள்ளங்களும் மேடுமாக, பாலை நிலமாக காட்சியளிக்கிறது.

இவை போல மார்க்ஸ் எங்கெல்சின் ஒவ்வொரு மேற்கோளை கொண்டும் நாம் சமகால சூழலியல் சிக்கல்கல்களின் ஆழ அகலங்களை பேச முடியும்.கட்டுரையின் விரிவஞ்சி இனி மேற்கோள்களை மட்டும் கீழே பார்ப்போம்.

## நிலத்தை சரக்காக்குதல் குறித்து:

நமக்கு எல்லாமுமாய் இருக்கின்ற புவியை, அனைவரின் இருப்பிற்கும் முதல் நிபந்தனையாக இருக்கும் நிலத்தை ஒரு விற்பனைப் பொருளாக மாற்றுவது என்பது ஒருவர் தன்னையே விற்பனைப் பொருளாக மாற்றுவதை நோக்கிய இறுதி அடியாகும். சுய அந்நியமாதல் என்ற ஒழுக்ககேடான செயலுக்கு அடுத்த படியான ஒழுக்ககேடு இதுவாகத்தான் இருந்தது, இன்றுவரை இருந்தும் வருகிறது.

தொடக்க கால கைப்பற்றல்பூமியை ஒருசிலர் ஏகபோகமாக்கிக் கொண்டு, மற்றவர்களை அவர்களுடைய வாழ்க்கைக்கு நிபந்தனையாக இருக்கும் நிலத்திலிருந்து வெளியேற்றுவது,அதைத் தொடர்ந்து பூமியை விற்பனைப் பொருளாக மாற்றும் ஒழுக்கக்கேட்டைத் தவிர வேறு எதையும் வழங்குவதில்லை. (எங்கெல்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை)

## நகரயமாக்கல் மற்றும் மண் வளம் குறித்து:

பெரும் கேந்திரங்களில் மக்களை ஒன்று திரட்டுவது மூலமும், நகர மக்கள் பெரும்பான்மையாய் இருக்கும் நிலையை மேலும் மேலும் அதிமாக்குவதன் மூலமும் முதலாளித்துவ பொருளுற்பத்தி ஒரு புறம் சமுதாயத்தின் வரலாற்று இயக்கு விசையை ஒன்று குவியச்செய்கிறது; மறுபுறம் மண்ணுக்கும் மனிதனுக்குமிடையில் நடைபெறும் பொருளின் சுற்றோட்டத்தை குலைக்கிறது;அதாவது உணவு உடையின் வடிவில் மனிதனால் நுகரப்பட்ட மண்ணின் கூறுகள் மண்ணுக்குத் திரும்பிச் செல்வதை தடுக்கிறது;ஆகவே மண்வளம் நிலைத்து நீடிப்பதற்கு அவசியமான நிலைமைகளை கெடுக்கிறது. (மார்க்ஸ், மூலதனம் பாகம் 1; புத்தகம் 1; பகுதி -IV; அத்தியாயம்XV; பிரிவு 10 இயந்திர சாதனமும் நவீனத் தொழிற்துறையும்; பக்கம். 682)

## மண்ணை அழித்தல் குறித்து:

முதலாளித்துவ விவசாயத்தின் முன்னேற்றம் எல்லாமே உழைப்பாளியை கொள்ளையிடுவது மட்டுமன்றி மண்ணையும் கொள்ளையிடுகிற கலையின் முன்னேற்றம்தான்; குறிப்பிட்ட காலத்துக்கு மண்ணின் வளத்தை அதிமாக்குவதிலான முன்னேற்றம் எல்லாமே அந்த வளத்துக்குரிய நிலையான ஆதாரங்களை கெட்டழியச் செய்யும் வழியிலான முன்னேற்றம்தான்.

ஒரு நாடு எவ்வளவுக்கெவ்வளவு நவீன தொழிற்துறையை அடிப்படையாகக் கொண்டு (உதரணமாக அமெரிக்க ஐக்கிய நாட்டை போல்) தன் வளர்ச்சியை தொடங்குகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிவேகமாய் இந்த அழிவு நிகழ்கிறது.ஆகவே முதலாளித்துவ பொருளுற்பத்தியானது செல்வங்களுக்கெல்லாம் மூல ஆதாரமாகிய மண்ணையும் உழைப்பையும் கசக்கிப் பிழிந்துதான் தொழில்நுட்பத்தை வளர்த்திடுகிறது. (மார்க்ஸ், மூலதனம்

தொடர்ச்சி 6ஆம் பக்கம்



அ.பாஸ்கர்



# கலைஞர் கொண்டுவந்த நலவாரியம் கோரி
# ஜன 23 பெரும் திரள் ஆர்ப்பாட்டம்

**தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் ஒரு கோடிக்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளை சமூக பொருளாதார அடிப்படையில் ஆய்வு செய்து மேம்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.**

கடந்த 1990 – 1991 ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அரசால் ஏற்று அறிவிக்கப்பட்ட தாராள மயம், தனியார் மயம், உலக மயம், என்கின்ற நவ தாராளமயக் கொள்கைகள் கிராமத்து தொழிலாளர் வாழ்க்கையில் கடுமையான பாதிப்புகளையும் நெருக்கடிகளையும் உருவாக்கி உள்ளது.

விவசாய பணிகள் அனைத்துமே இயந்திரமாகி விட்டன. இதனால் உடல் உழைப்பு பணிகள் வெகுவாக குறைந்து விட்டன.

விவசாய தொழிலையே நம்பி வாழ்கிற விவசாய தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

இயந்திரம் இல்லாமல் வேளான் தொழில் செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு மானியம் வழங்குவதற்கு பதிலாக, இயந்திரத்தைக் கொண்டு வேளாண் தொழில் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது வேளாண்மை துறை.

இதனால் விவசாய தொழிலில் வேலை இழப்பிற்கு ஆளாகி வரும் விவசாய தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

வேளான் தொழிலில் பயன்படுத்தப்படும் நவீன கருவிகளை இயக்கும் பயிற்சிகளை அளித்து திறன் மேம்படுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளில் நில உடமைகளிலும் விவசாயிகள், விவசாய தொழிலாளர் உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விவசாய தொழிலாளர் வேலை நிலைகளில் உருவாகியுள்ள புதிய சூழல் குறித்தும், நிலமில்லாத, கிராம தொழிலாளர்கள் அனைவருக்கும் சுயமரியாதையுடன், கண்ணியமான வாழ்க்கை அமைத்துக் கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான தொலைநோக்கு பார்வையை அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து விவசாய தொழிலாளர்களுக்கு தனி அடையாள அட்டை வழங்கும் வகையில் பரிந்துரைகளை பெறுவதற்கு தமிழ்நாடு அரசு விவசாயத் தொழிலாளர் சங்க பிரதிநிதிகளும் துறை சார்ந்த வல்லுனர்களும் கொண்ட ஒரு உயர் மட்ட குழு அமைக்க வேண்டும்.

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஏழாவது மாநில மாநாடு 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26, 27,28 மூன்றுநாள் திருவாரூரில் எழுச்சியோடு நடைப்பெற்றது.

பொது மாநாடு திருவாரூர் தெற்கு வீதியில் பல லட்சக்கணக்கான விவசாய தொழிலாளர்கள் தமிழ்நாடு முழுவதும் இருந்து வருகை தந்துதிருந்தனர். அந்த மாநாட்டில் தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

நமது கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணும், நமது சங்கத்தின் பொதுசெயலாளர் இரா.முத்தரசனும் விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சனைகளை அரசுக்கு கொண்டு செல்லும் வகையில் பல்வேறு தீர்மானங்களை முன்மொழிந்து பேசினார்கள்.

விவசாய தொழிலாளர் வாழ்க்கை மேம்பாடு குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை வழங்க இந்திய ஆட்சிப் பணி அதிகாரி பெ.கோலப்பன் தலைமையில் வேளாண் தொழிலாளர் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவித்தார். பெ.கோலப்பன் தலைமையிலான உயர்மட்ட குழுவில் உங்கள் மாநில செயலாளர் இரா.முத்தரசனும் உறுப்பினராக இருப்பார்.

தமிழ்நாடு முழுவதும் குழு விரிவான ஆய்வு செய்து அரசுக்கு வழங்கும் பரிந்துரைகளை அரசு நிறைவேற்றி தரும் என அறிவித்தார்

திருவாரூர் தெற்குவீதியில் திரண்டிருந்த லட்சகணக்கான மக்களின் கர ஒலி முழங்கியது. குழு தமிழகம் முழுவதும் ஆய்வு செய்தது.

அரசு துறை தலைவர்களுடன் விவாதித்து 43 பரிந்துரைகளை ஒருமனதாக தயாரித்து அரசுக்கு வழங்கியது. உயர்மட்ட குழுவின் பரிந்துரை ஏற்று தமிழ்நாடு விவசாய தொழிலாளர் நலவாரியம் அமைக்கப்பட்டது.

இந்த நல வாரியம் மூலம் விவசாய தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயத் தொழிலாளர்கள் 7 ஆயிரம்பேர்



நல வாரியத்தில் இணைந்தனர்

ஒரு தொழிலாளர் ரூ 100 வீதம் பங்கு தொகை செலுத்தினார்கள்.தமிழ்நாடு அரசு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில், விவசாயத் தொழிலாளர்கள் செலுத்திய பங்கு தொகை 7 ஆயிரம் கோடி அரசுக்கு நலவாரிய கணக்கில் வந்ததாக அரசு அறிவித்தது. இது விவசாய தொழிலாளர் வரலாற்றில் ஒரு புதிய திருப்பமாக அமைந்தது.

அரசியல் சூழலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் அரசியல் காரணங்களால் நல வாரியம் கலைக்கப்பட்டது. முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிவிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்யும் நல வாரியத்திற்கு மாற்றாக, அரசின் சலுகை பெறும் பயனாளிகள் திட்டமாக மாற்றப்பட்டதால் உழவர் பாதுகாப்புத் திட்டத்தால் விவசாய தொழிலாளர்கள் ஏனைய நல வாரியத்தில் உள்ளதுபோல் பயன்பெற முடியவில்லை.

இதனை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் 13 வது மாநில மாநாடு 2023 ஜுலை 28, 29, 30 தேதிகளில் இராசபாளையத்தில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

விவசாய தொழிலாளர்கள் நலத்திட்ட உதவிகளை பெரும் வகையில் தமிழக முதல்வர்1999 ஆம் ஆண்டில் அமைத்த நல வாரியத்தை அடிப்படையாகக் கொண்டு நல வாரியத்தில் உறுப்பினர் சேர்த்தல், கேட்ப்பு மனு தாக்கல் செய்தல், அதன் மீது தீர்வு காண தொழிலாளர் சிறப்பு பிரதிநிதியாக செயல்பட அனுமதித்தல், உள்ளிட்ட தொழிற்சங்க உரிமைகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு விவசாய தொழிலாளர் நல வாரியம் அமைத்திட கோரியும்.

நீர்தேக்கங்கள்.நீர்வழிப்பாதைகள், ஆற்றுகரைகள், சாலையோரங்களில் குடியிருப்போர்களை உச்சநீதிமன்ற ஆணையை காட்டி, தலைமுறை தலைமுறையாக குடியிருந்து வருபவர்களின் வீடுகளை இடித்து தெருவில் நிறுத்தி வரும் நிலை தொடர்கிறது.

கலைஞர் நூற்றாண்டில் அனைவருக்கும் குடிமனை பட்டா வழங்கிட உறுதிப்படுத்த கோரியும், ஊராட்சிகளில் கணக்கெடுக்கப்பட்டுள்ள கலைஞர் விடு வழங்கும் திட்டத்தை உடன் செயல்படுத்திடவும் ஒன்றிய அரசும், மாநில அரசும் ஒருங்கிணைந்து கட்டப்படும் வீடுகள் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட அடிபடைவசதிகளுடன் வீடு கட்டிட குடும்பங்களுக்கு ரூ 6 லட்சம் முழு மானியத்துடன் வழங்கிட வேண்டும் என்று கோரியும்

ஒன்றிய அரசு நூறுநாள் ஊதிய பாக்கியை தமிழக அரசு உடன் வழங்க வேண்டும் என கோரி, ஜனவரி 23ம் தேதி தமிழ்நாடு முழுவதும் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பெரும் திரள் ஆர்ப்பாட்டம்

வாழ்வாதாரம் காக்க களம் அமைப்போம் வாரீர்.

---

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

பாகம் 1; புத்தகம் 1; பகுதி IV; அத்தியாயம் ஙீக்ஷி; பிரிவு 10 இயந்திர சாதனமும் நவீனத் தொழிற்துறையும்; பக்கம். 683)

### இயற்கை மீதான மனிதனின் ஆதிக்கம் குறித்து:

“இயற்கையின் மீது மனித வெற்றிகளை வைத்துக்கொண்டு நம்மை நாம் அளவு கடந்து தற்புகழ்ச்சி செய்து கொள்ள வேண்டியதில்லை.ஏனெனில் இப்படிப்பட்ட வெற்றிஒவ்வொன்றுக்கும்இயற்கைநம்மைப் பழி வாங்குகிறது.ஒவ்வொரு வெற்றியும் முதலாவதாக நாம் எதிர்பார்க்கின்ற விளைவுகளை நிகழ்த்துகிறது என்பது உண்மையே. ஆயினும் இரண்டாவது ,மூன்றாவது நிலைகளாக நாம் எதிர்பார்க்காத,முற்றிலும் வேறுப்பட்ட பலன்களையும் அளிக்கிறது;இவை பல தடவைகளிலும் முதலில் சொன்னதை ரத்து செய்துவிடுகின்றன.

மெசபட்டோமியா, கிரீஸ், ஆசியா மைனர், இன்னும் இதர இடங்களிலும் சாகுபடி நிலங்களை பெறுவதற்காக காடுகளை அழித்த மக்கள், காடுகளை அழித்ததுடன் கூடவே நீர்த்தேக்கங்களையும் தண்ணீர் ஒருங்கு சேரும் இடங்களையும் ஒழித்ததனால் அவர்கள் அந்த நாடுகளின் தற்போதைய திக்கற்ற நிலைக்கு அடிகோலியதைக் கனவும் கூடக் காணவில்லை.

ஆல்ப்ஸ் மலைகளில் குடியேறிய இத்தாலியர்கள் வடபுறச்சரிவுகளில் அவ்வளவு பரிவுடன் பேணிக் காக்கப்பட்ட பைன் மரக்காடுகளைத் தென் புறச்சரிவுகளில் பூரணமாக வெட்டி பயன்படுத்தி விட்டபொழுது,அவ்விதம் செய்ததின் மூலம் அப்பிரதேசத்துப் பால்பண்ணை தொழிலின் அடி வேர்களையே வெட்டி விட்டதன் சூசகத்தையும் கூடக் காணவில்லை.

அதன் மூலம் வருடத்தின் பெரும் பகுதியில் மலைச்சுனைகளுக்குத் தண்ணீர் இல்லாமல் செய்து விட்டதைப்பற்றியும் மழைக் காலங்களில் கூடுதலான வெள்ளப்பெருக்குடன் அவை சமவெளிகளில் பாய்வதற்கு வகை செய்யப்பட்டது என்பதை பற்றியுமோ, அந்த அளவு சூசகம் கூடக் காணவில்லை.

அயல்நாட்டு மக்கள் மீது வெற்றிவாகை சூடியவனை போல, இயற்கைக்குப் புறத்தே நிற்கும் ஒருவனைப் போல இயற்கை மீது எவ்விதத்திலும்நாம் ஆளுகை புரியவில்லை என்பதும் அதற்கு பதிலாக நமது சதை, ரத்தம், மூளை இவற்றுடன் இயற்கையோடு சேர்ந்தவர்கள் நாம் அதன் நடுவில் வாழ்கிறோம் என்பதும், இயற்கையின் நியதிகளைக் கற்றுக்கொண்டு அவற்றைப் பொருந்தியவாறு கடைப்பிடிப்பதிலும் இதர எல்லாப் பிராணிகளைக் காட்டிலும் நமக்கு அனுகூலம் உள்ளது என்பதிலேயே அதன் மீது நமது ஆளுகை அடங்கியுள்ளது என்பதும் ஒவ்வொரு படியிலும் நமக்கு நினைவூட்டப்படுகிறது

கியூபாவில் மலைச்சரிவுகளில் இருந்த காடுகளைத் தீயிட்டுக் கொளுத்தி மிகவும் உயர்ந்த லாபகரமான காபிச் செடிகளின் ஒரு தலைமுறைக்குப் போதுமான உரத்தை அந்த சாம்பலிலிருந்து பெற ஸ்பானிய காப்பித்தோட்ட முதலாளிகள் என்ன கவலைப்பட்டார்கள்! வெப்ப பிரதேச கன மழைக்கு பின்னால் பாதுகாப்பற்ற மேல் படிவ மண் முழுவதையும் அடித்துக் கொண்டு போய் பாறைகளை மட்டும் மொட்டையாக விட்டுச்சென்றது என்பதைப் பற்றித்தான் அவர்கள் என்ன கவலைப்பட்டார்கள் !சமூகத்தைபோலவே இயற்கை சம்பந்தமாகவும் கூட இக்காலத்தைய உற்பத்தி முறை உடனடியான,மிக உருப்படியான விளைவுகளைப் பற்றி மட்டுமே பிரதானமாக அக்கறை கொண்டுள்ளது. (மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப்படியில் உழைப்பின் பாத்திரம்” நூலில் எங்கெல்ஸ்)

இவை மட்டுமல்ல சூழலியல் குறித்த மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் கருத்துக்கள் இன்னும் ஏராளமாக இருக்கிறது.

# மோசடி செய்த பா.ஜ.க. அரசு!
## பில்கிஸ் பானு வழக்கில் உச்சநீதிமன்றம் சாடல்!


ந.சேகரன்

**2024 ஜனவரி 8 ம்நாள் குறைந்து, வரும் நீதிமன்றத்தின் மீதான நம்பகத் தன்மையை மீட்டு எடுத்த நாள். ஆம்! அன்றைய தினத்தில்தான்,நாட்டையே அதிர வைத்த பில்கிஸ் பானு பாலியல் வன்புணர்வு வழக்கில் தீர்ப்பை வழங்கியது.**

குற்றவாளிகளுடன் உடந்தையாய் கூட்டு வைத்துக் கொண்டு, உச்ச நீதிமன்றத்தில் பொய்யான தகவல் அளித்து குஜராத் அரசு மோசடி செய்துள்ளது என பாஜக அரசை கடுமையாக சாடியுள்ளது உச்சநீதிமன்றம்.

சிறைத் தண்டனை, குற்றவாளிகளை சீர்திருத்தும் நோக்கத்திற்காகதான் விதிக்கப்படுகிறது என்ற பிளேட்டோவின் மேற்கோள்களுடன் தொடங்கிய தீர்ப்பின் முக்கியமான கூறுகளைக் காண்போம்.

1) சம்பந்தப்பட்ட பாலியல் வன்புணர்வு குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் அதிகாரம், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கிய மகாராஷ்டிரா நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. ஆனால் பின்பு நடந்த விசாரணையில், தவறான பொய்யான தகவல் உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டது, அதனைடிப்படையில் கடந்த 2022 மே 13 ல் உச்ச நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட, முன்கூட்டியே குற்றவாளிகளை விடுவிக்கும் மனுவை குஜராத் அரசு பரிசீலிக்கலாம் என்ற உத்தரவு ரத்து செய்யப்படுகிறது.

2) குற்றவாளிகளுடன் உடந்தையாய் இருந்து, உண்மைகளை மறைத்து, , நீதிமன்றத்திற்கு தவறான தகவல்களை அளித்து, இல்லாத அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளது குஜராத் அரசு.

3) அதிகார அபகரிப்பு அதாவது இல்லாத அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தி, 11 குற்றவாளிகளை முன்கூட்டி விடுதலை செய்த குஜராத் அரசின் ஆணை ரத்து செய்யப்படுகிறது. ஆகவே விடுதலை செய்யப்பட்ட 11 குற்றவாளிகளை 2 வார காலத்திற்குள் மீண்டும் சிறைக்கு அனுப்ப வேண்டும்.

4) பெண்களுக்கு எதிரான பாலியல் வழக்குகளில் அந்தப் பெண் எந்த ஜாதியை, எந்த மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும், எந்த பொருளாதார நிலையிலிருந்தாலும் உரிய நீதி வழங்கப்பட வேண்டும்.

5) தண்டனை பெற்ற குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கு காரணங்கள் இருக்க வேண்டும். தண்டனை



அனுபவிப்பவர்கள், மனந்திருந்தி நம் நாட்டுக்கு பயனுள்ளராக இருப்பார் என கருதினால், அதற்கு வாய்ப்பிருந்தால் மட்டுமே விடுதலை செய்ய இயலும்.

6) குற்ற வழக்குளில் தண்டனை என்பது ஒருவரை தண்டிப்பது மட்டுமல்ல. அதுபோன்ற குற்றங்களை நிகழாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டது. இந்த வழக்கில் அப்பட்டமாக பல மீறல்கள் நடந்துள்ளன.



### குற்றமும் தண்டனையும்!

2002 ம் ஆண்டு மார்ச் 3 ம் தேதி நடந்த சம்பவத்துக்கான இந்த வழக்கை, சிபிஐ வசம் உச்சநீதிமன்றம் ஒப்படைத்த பிறகே, முதல் கைது 2004ஆம் ஆண்டு நடந்தது.

அப்போது, குஜராத்தில் வழக்கு நடத்த பாதுகாப்பில்லை, நீதியும் கிடைக்காது எனக்கூறி பில்கிஸ் பானு தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உதவியுடன், பில்கிஸ் பானு வழக்கு மகாராஷ்டிராவுக்கு மாற்றப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

### 17 ஆண்டுகால போராட்டம்!

பில்கிஸ் பானுவுக்கு மகள்கள் ஹஜ்ரா, பாத்திமா, சலேஹா என 3 மகள்களும் யாசின் என்ற மகனும் உள்ளனர்.

தன் கண் முன்னே கால்களைப் பிடித்து, தரையில் தலையை அடித்து கொலை செய்யப்பட்ட 3 வயதான மகளின் சலேஹா என்ற பெயரை இளைய மகளுக்கு சூட்டியுள்ளார் பில்கிஸ் பானு.

ஜனவரி 21, 2008 அன்று, மும்பையில் உள்ள சிறப்பு சிபிஐ நீதிமன்றம் பில்கிஸ் பானுவின் ஏழு குடும்ப உறுப்பினர்களைக் கொலை செய்துவிட்டு, பில்கிஸ் பானுவை கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்த 11 பேரை குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்து அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்தது. மும்பை உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை உறுதி செய்தது.

### மோடியின் சொல் ஒன்று, செயல் வேறு!

2022 ஆகஸ்ட் 15 பிரதமர் மோடியார், செங்கோட்டையிலிருந்து ஆற்றிய சுதந்திர தின உரையில் கூறுகிறார்..

“பெண்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அதுதான் இந்திய வளர்ச்சிக்கான தூண். நம் பேச்சிலும், செயலிலும் பெண்களின் மாண்பைக் குறைக்கும் சிறு வெளிப்பாடு கூட இருக்கக் கூடாது. நம் தேசத்தின் மகள்கள், தாய்மார்கள் நாட்டுக்காக பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றனர். சட்டம், கல்வி, அறிவியல், காவல்துறை என நம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் பெண் சக்தியின் பங்களிப்பு அளப்பரியது.

பெண் வெறுப்பை துடைத்தெறிவோம். பெண்கள் முன்னேற்றத்தை உறுதி செய்தால் தேச முன்னேற்ற இலக்கை விரைவில் அடையலாம்.”

இப்படி பெண்களின் பாதுகாப்புமரியாதை பற்றி மோடியார் பசப்புரை நிகழ்த்திய கொஞ்ச நேரத்திலேயே, பில்கிஸ்பானுவை பாலியல் வன்புணர்வு செய்த அந்த 11 ஆயுள் தண்டனை குற்றவாளிகளை, தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பாகவே விடுதலை செய்த குஜராத்தின் பாஜக அரசு.

சிறையிலிருந்து வெளியான 11 குற்றவாளிகளுக்கு மாலை அணிவித்து, வரவேற்பு அளித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர் பாஜகவினர்.

இதுதான் பெண் மரியாதையை கண்ணியத்தை, பாதுகாப்பை மதிக்கும் பாஜக ஸ்டைல். அதாவது சொல்லுக்கும் செயலுக்கும் சற்றும் சம்பந்தமில்லாத நடவடிக்கைகள்.

அண்மையில் தமிழ் செய்தித்தாள்களில், “பெண்களின் கண்ணியத்தை உறுதி செய்தல் மோடி அரசின் உத்தரவாதம்” என மக்களின் பணத்தில் மோடி படத்துடன் விளம்பரம் செய்து மக்களை ஏமாற்ற முயலும் கொடுமையை என்னென்பது!

குற்றவாளிகளின் முன்கூட்டிய விடுதலை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்!

இந்தமனுக்களை மீதான விசாரணையை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.வி.நாகரத்னா, உஜ்ஜால் பூயன் ஆகியோரை கொண்ட அமர்வு விசாரணை செய்து வந்தது.

### தீர்ப்பும் பில்கிஸ் பானுவும்!

அதன் மீதான இறுதி தீர்ப்புதான் ஜனவரி 8 ந் தேதி பிறக்கப்பட்டது. வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த அந்த தீர்ப்பைக் கேட்டதும். கடந்த 22 ஆண்டுகளாக நீதி கேட்டு போராடி வந்த அந்த வீராங்கனை பில்கிஸ் பானு கூறுகிறார்..

“இன்றுதான் எனக்கு (ஜன 8) உண்மையான புத்தாண்டு. நான் நிம்மதியாக கண்ணீர் விட்டேன். ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு நான் முதன்முறையாக சிரித்தேன். என் நெஞ்சிலிருந்து ஒரு மலை அளவு சுமையை தூக்கி எறிந்தது போல் உணர்கிறேன். என்னால் மீண்டும் சுவாசிக்க முடிகிறது. நீதியை இப்படித்தான் உணர முடிகிறது. இந்த நியாயத்தை வழங்கிய உச்ச நீதிமன்றத்திற்கு நான் நன்றி கூறுகிறேன்”

ஜன.8 தேதிய உச்சநீதிமன்ற தீர்ப்பை இந்து தமிழ் நாளிதழ், தினமணி, தினத்தந்தி உள்ளிட்ட நாளேடுகள், அரைகுறையாக வெளியிட்டுள்ளன. குறிப்பாக உண்மைகளை மறைத்தும், தவறான தகவல்களைத் தந்தும் மோசடியான முறையில் அதிகார துஷ்பிரயோகம் செய்த குஜராத் அரசை உச்சநீதிமன்றம் கண்டித்துள்ள செய்தியை வேண்டுமென்றே கபட நோக்கில் இருட்டடிப்பு செய்து தங்களது எஜமான விசுவாசத்தை நிரூபித்தன.

உச்சநீதிமன்றத்தின் மீதான நம்பகத்தன்மை மிகவும் குறைந்துவரும் இந்த காலகட்டத்தில் சற்று ஆறுதலளிக்கும் வகையில் இந்த தீர்ப்பு அமைந்துள்ளது.

ஆனால் தில்லுமுல்லு மோசடி அதிகார துஷ்பிரயோகம் செய்த குஜராத் அரசும், அதற்கு உறுதுணையாக ஒன்றிய உள்துறை அமைச்சரும் உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னரும் பதவிகளில் தொடர்வது வெட்கக்கேடு, அவமானகரமானது.

இதற்கான இறுதி தீர்ப்பை வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்குவர், மோடி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பர் என்பது மட்டும் உறுதி!

தொடர்புக்கு: 9443120051

### சட்டப்போராட்டம் நடத்திய வீரர்கள்

அந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில்

1) இந்திய மாதர் தேசிய சம்மேளனம் பொதுச்செயலாளர் ஆனிராஜா.

2) அகில இந்திய மாதர் சங்கத்தின் துணைத் தலைவர் சுேபாசினி அலி,

3) பத்திரிகையாளர் ரேவதி லால்

4) முன்னாள் பேராசிரியர் ரூப் ரேக் வர்மா

5) பில்கிஸ் பானு

இவர்களுக்கும் இவர்களோடு இணைந்து இச்சட்டப்போரட்டத்தில் போராடிய அனைவருக்கும் பாராட்டுக்கள்.

## பாஜக அரசே குற்றவாளி !


பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகளுக்கு பாஜகவின் ஒன்றிய அரசும், குஜராத் அரசும் “உதவியாகவும், உடந்தையாகவும்” இருந்திருக்கிறது என உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது.

பில்கிஸ் பானு வழக்கில் ஏற்கெனவே உச்சநீதிமன்ற தலையீட்டிற்குப் பின்னர்தான் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் 2022ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று ஒன்றிய மோடி அரசும், குஜராத் அரசும் இணைந்து விடுதலை செய்து தனது கூட்டாளிகளைக் காப்பாற்றியது. நீதி குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. 2002இல் குஜராத் கலவரத்தின் போது, 5 மாத கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ் பானு சங்பரிவார் கும்பலால் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார். அவரது மகளும் கொல்லப்பட்டார். இந்த கொடூரத்தை அரங்கேற்றிய கும்பலுக்கு பாஜக அரசு ஆரம்பம் முதலே உடந்தையாக இருந்தது.

உச்சநீதிமன்ற தீர்ப்பில் அம்பலமாகியிருக்கிறது. இந்த குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கில், குஜராத் அரசு இறந்தவர்களின் உடல்களை முறையற்ற விதத்தில் பிரேதப் பரிசோதனை செய்திருக்கிறது. அடையாளம் தெரியாத வகையில் இறந்தவர்களின் தலையையும் துண்டித்திருக்கிறது; இதில் அரசின் சார்பில் இரண்டு மருத்துவர்களும், 5 காவல்துறையினரும் பங்கேற்றிருக்கின்றனர் என சிபிஐ தனது குற்றப்பத்திரிகையில் தெரிவித்திருக்கிறது. மேலும் குற்றவாளிகளில் ஒருவரான ராதேஷ்யன் பகவான்ஷா தண்டனையைக் குறைக்கச் சொல்லி குஜராத் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்த போது அது நிராகரிக்கப்பட்டது.

இதையெல்லாம் மேல்முறையீட்டின் போது, குற்றவாளிகளுடன் இணைந்து குஜராத் பாஜக அரசும் திட்டமிட்டு மறைத்திருப்பது தற்போதைய தீர்ப்பில் அம்பலமாகியிருக்கிறது.



டாக்டர் கங்காதர் அதிகாரி

# காந்தி படுகொலை: மதவாத

**“மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட அடுத்த வாரத்தில் வெளியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இதழான ‘பீப்பிள் ஏஜ்’ பத்திரிகையில், 1948 பிப்ரவரி 8ம் தேதிய இதழில் கட்சியின் அன்றைய பொதுச் செயலாளர் டாக்டர் கங்காதர் அதிகாரி அவர்கள் மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தி எழுதிய கட்டுரை”**

மகாத்மா காந்தியின் மறைவுக்கு கம்யூனிஸ்ட் கட்சி தனது இறுதி மரியாதையைச் செலுத்துகிறது. ஒரு கால் நூற்றாண்டுக் காலத்திற்கும் அதிகமாக, இந்திய அரசியலின் மீது ஆளுமை செலுத்தி, இந்திய விடுதலைப் போராட்டத்தைச் செதுக்கி உருவாக்கிய மாமனிதர் அவர். முதலாம் உலகப் போருக்கு முன்னால், மிதவாதிகளிடம் முடங்கிக் கிடந்த இந்திய விடுதலை இயக்கத்தை வெளியில் எடுத்து, 40 கோடி மக்களை ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுகிற வழிமுறையை உருவாக்கியவர் மகாத்மா காந்தியே.

மக்கள் மனதில் ஏகாதிபத்திய எதிர்ப்பையும், ஜனநாயகத்தின் மீதான தாகத்தையும் ஊட்டி, விழிப்படையச் செய்வதில் அவர் ஆற்றிய மகத்தான பங்கை கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகரிக்கிறது.

இந்திய விடுதலையை எய்துவதற்கு இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தி, தனக்கே உரிய வழியில் தளர்வில்லாத போராட்டத்தை அவர் வாழ்நாள் முழுக்க நடத்தினார். ஏகாதிபத்தியம் திட்டமிட்டுச் செய்த தேசப் பிரிவினைக்கு முன்னும் பின்னும் நடந்த படுமோசமான வகுப்புக் கலவரங்களின் நடுவில், வகுப்புவாதத்திற்கு எதிராய் நின்று உயிரிழக்கவும் நேரும் அபாயத்தைப் பொருட்படுத்தாமலேயே பணியாற்றினார்.

முஸ்லிம் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கும், இந்து வகுப்புவாத தீவிரவாதிகளை எதிர்த்து நிற்பதற்கும் அவருக்கே உரிய வழிமுறைகளைச் சாதுரியமாகக் கையாண்டார். அவரது இந்த வீரமிக்க செயல்பாடுகளால் தான் இந்து மகாசபையிலிருந்தும், ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்.) அமைப்புகளிலிருந்தும் வந்த இந்து வகுப்புவாத சக்திகளின் பழிதூற்றலுக்கும், அவர் இலக்கானார். கடைசியில் இதே அமைப்புகளின் கொலைச் சதியின் தாக்குதலில் அகால மரணத்துக்கு ஆளானார்.

பட்டப்பகல் வெளிச்சத்தில், இந்தியாவின் தலைநகரின் மையமான பகுதியில், காங்கிரஸால் நடத்தப்படும் ஆட்சியிலேயே அவர்கள் கண் முன்னாலேயே மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டார் என்பது மாபெரும் சோகம் மட்டுமல்ல; இந்திய மக்களுக்கு ஒரு எச்சரிக்கை, அபாய சமிக்ஞை; நாட்டின் முற்போக்கு, ஜனநாயக சக்திகளுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு சவால்.

இது ஏதோ ஒரு பைத்தியக்காரனின் வெறிபிடித்த செயல் மட்டுமேயல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாய்த் திகழ்ந்த லட்சாதிபதிகளான சில வணிகர்கள், சமஸ்தான மன்னர்களின் வாரிசுகள், பெரிய நிலச்சுவான்தார்கள் போன்றவர்களின் நிதியுதவி பெற்ற, இந்து வகுப்புவாத சக்திகள் முதல் தடவையாக இணைந்து நின்று ஒன்று சேர்ந்து திட்டமிட்ட, காட்டுமிராண்டித் தனமான சதி இது.

இளவரசர்களுக்கும், பண்ணையார்களுக்கும், ஏகாதிபத்தியத் திற்கும் கைக் கருவியாய் செயல்படும் இதே சக்திகள்தான் கிழக்கு பஞ்சாபிலும், உத்திரப்பிரதேசத்திலும், டெல்லியிலும் இன்னும் பல இடங்களிலும் வகுப்புவாதக் கொலைகளைப் புரிந்தவர்கள். பாகிஸ்தானில் முஸ்லிம் தீவிரவாதிகள் எவ்விதம் செயல்படுகிறார்களோ, அதற்கு எள்ளளவும் குறைவில்லாத மூர்க்கத்தோடு அராஜகச் செயல்களை இந்து வகுப்புவாத சக்திகள் இங்கு நடத்தி வருகின்றன.

டெல்லி, பஞ்சாப் கலவரங்களின் போது ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஆயுதமேந்திய கும்பலும், இந்து, சீக்கிய வகுப்புவாத அமைப்புகளின் குண்டர்களும் சேர்ந்து நடத்திய படுகொலைகள், கொள்ளைகளை நாடறியும்.

இந்தக் கும்பல்கள் சிறுபான்மை யினருக்கு எதிராக நடத்திய அராஜகங்களையும், கொள்ளைகளையும் ஏறத்தாழ தடுத்து நிறுத்தவே முடியாத நிலையில் மத்திய அரசு உள்ளது. ஏனெனில் ஏகாதிபத்தியம் உருவாக்கிக் கொடுத்த ராணுவமும், காவல்துறையும் உள்ளிட்ட இந்த நிர்வாக அமைப்பே வகுப்புவாத விஷம் ஏற்றப்பட்டதாகும். இவர்கள் ஏதோ முஸ்லிம் கலகக்காரர்களிடமிருந்து, டெல்லியிலுள்ள அரசைத் தாங்கள் காப்பாற்றி விட்டதாகக் கூறிக் கொண்டு திரிகிறார்கள்.

ஆனால், உண்மையில், மகாத்மாவைக் கொலை செய்த நாதுராம் கோட்ஸேயின் நெருங்கிய நண்பரான அகில இந்திய இந்து மகாசபாவின் செயலாளரான வி.ஜி.தேஷ்பாண்டே நடத்தி வரும் ‘இந்து அவுட்லுக்’ எனும் பத்திரிகையில் சென்ற அக்டோபர் மாதத்திலேயே மத்திய அரசிலுள்ள புல்லுருவி மனிதர்கள்’ சிலர் அகற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

பண்டிட் நேரு, மௌலானா ஆஸாத் போன்றவர்களைத்தான் அவர்கள் புல்லுருவி மனிதர்கள் என்கிறார்கள். இந்தக் கும்பலின் டெல்லிப் பத்திரிகைதான் காந்தி, நேரு, மௌலானா ஆஸாத் ஆகியோரைப் படுகேவலமாகச் சித்தரித்து கட்டுரைகளை வெளியிட்டது. பர்மாவில் ஆங்சான் மற்றும் அவரது சகாக்களுக்கும் கொடுக்கப்பட்ட மரியாதையை, (அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்) இந்தியாவில் காந்திக்கும் நேருவுக்கும் தர வேண்டும் என்று டெல்லி வீதிகளில் இதே நபர்கள் ஒளிவுமறைவின்றி பேசித் திரிந்தனர்.

ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபா ஆகியவற்றின் நடவடிக்கைகளை கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வெளிப்படுத்தி வந்திருக்கிறது. அவர்களின் இலக்குகளை அம்பலப்படுத்தியிருக்கிறது. காங்கிரஸ் அரசின் உறுப்பினர்களுக்கும், காந்திஜிக்கும் எதிரான சதிகளை இந்த வகுப்புவாதக் கும்பல் தீட்டி வருகிறது என்பது கடந்த (1947) ஆகஸ்ட் மாதத்தில் இருந்தே வெளிப்படுத்தியுள்ளோம்.

இந்தச் செய்திகளால் காங்கிரஸ் அரசு எச்சரிக்கை அடைந்து. சரியான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, ‘பீப்பிள்ஸ் ஏஜ்’ பத்திரிகையை 4 வாரங்கள் வெளியிடவிடாமல் தடுத்து நிறுத்தியது.

சாதாரண இந்துக்களின் நன்மைக்காகத் தாங்கள் பணி யாற்றுவதாக ஆர்.எஸ்.எஸ்.ஸும், இந்து மகா சபாவும் அப்பட்டமாகப் பொய் சொல்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலை இயக்கத்தை காங்கிரஸும், பிற தேசபக்த சக்திகளும் நடத்திக் கொண்டிருந்த போது இவர்கள் எங்குமே காணப்படவில்லையே. உண்மையில் இவர்கள் ஏகாதிபத்திய

> சதிகாரர்களின் நோக்கம் காங்கிரஸ் அரசை மாற்றுவதல்ல; அதன் நிறத்தை மாற்றி விடுவதே! அது காங்கிரஸ் அரசாகவே இருந்து கொண்டு, வகுப்புவாதிகளின் விருப்பத்திற்கேற்ப செயல்பட வேண்டும்; எதிர்ப் புரட்சிக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் அது கைக்கருவியாக இருக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம்.

ஆதரவாளர்கள். நிலச்சுவான்தார்களுக்கு நெருக்கமானவர்கள்; எதிர்ப்புரட்சியாளர்கள்; வணிகப் பெருந்தனக்காரர்களின் ஆதரவில் வாழ்பவர்கள். அவர்களது முக்கியமான குறியிலக்கு, மக்களை புரட்சிகரப் பாதையிலிருந்து தடம்புரட்டி, வகுப்புவாதக் கால்வாய்க்குள் வழிந்தேடச் செய்வது; ஒன்று சேரவிடாமல் பிரித்து நிறுத்துவது.

அவர்கள் சுயநலச்சக்திகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து ஒரே வரிசைக்கு கொண்டு வரமுயலுகிறார்கள். இந்த வரிசையில் இடம் பெறும் முதலாளிகள் தீவிர வலதுசாரித் தன்மை கொண்டிருப்பர்; நிலப்பிரபுத்துவ, வகுப்புவாத சக்திகளோடு இணக்கமான தொடர்பு வைத்திருப்பார்கள். இதன் மூலம் மக்களுக்கு எதிரான ஒரு வலிமையான முன்னணியை உருவாக்கி நிலைப்படுத்த விரும்புகிறார்கள்.

இவற்றைச் சாதிப்பதற்கு வசதியாக, இந்திய அரசையே வலது பக்கம் கொண்டு செல்ல நிர்ப்பந்தம் செய்து வருகிறார்கள். நேருவின் அலை பாயும் தன்மை கொண்ட கொள்கைகளைத் தோற்கச் செய்து, சர்தார் வல்லபாய் படேலின் வகுப்புவாதிகளுக்கு இணக்கமான கொள்கைகளுக்கு வலிமையூட்டி, அதன் மூலம் அரசாங்கத்தையே வகுப்புவாதிகளுக்கு இணக்கமாகக் கொண்டு வர முயற்சி நடக்கிறது.

இந்த வகுப்புவாதிகளுக்குப் பின்னால் நிற்கும் கும்பலின் சமூக அடித்தளம் குறுகியதாய் இருந்தும் கூட, இந்த வகுப்புவாதிகள் வெகுமக்களின் ஆதரவை எப்படித் திரட்டுகிறார்கள். இதற்கு ஒரே காரணம் காங்கிரஸ் தலைமையே, இந்த வகுப்புவாதிகளை தாஜா செய்யும் கொள்கையைக் கொண்டு இருப்பதுதான்.

டெல்லி பஞ்சாப்பில் நடைபெற்ற கலவரங்களை மையத்திலுள்ள காங்கிரஸ் தலைமை எவ்வாறு சந்தித்தது? என்ன எதிர் நடவடிக்கை எடுத்தது? என்பதைப் பார்த்தால் இது தெளிவாகும். வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக நிர்வாக அமைப்பும், போலீஸும், ராணுவமும் களத்தில் இறக்கப்பட வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சி கோரியது. ஜனநாயக சக்திகளை திரட்டி, ஒன்றுபடுத்தி அவற்றை ஆயுதம் தாங்கிய ஆர்.எஸ்.எஸ்., இந்து சபா கும்பலுக்கு எதிராக நிறுத்தி, தலைமை தாங்க முன் வருமாறு காங்கிரஸ் தலைமைக்கு கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்தது.



காந்தியின் உடலுக்கு அஞ்சலி



கோட்சே காந்தியை சுடுவதற்கு சற்று முன்

ராணுவத்தையும், போலீஸையும், நிர்வாக அமைப்பையும் வகுப்புவாதிகளுக்கு எதிர் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக, ஜனநாயக சக்திகளைத் திரட்டி நிறுத்தி அதன் மீது நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, காங்கிரஸ் தலைமை எளிதான, வெகு ஆபத்தான வழியைக் கடைப்பிடிக்கிறது. வகுப்புவாதிகளைத் தாஜா செய்து, சமாதானம் செய்கிறது. வகுப்புவாதிகளுக்கு தலைமை தாங்கும் பாட்டியாலா மகாராஜா, பரத்பூர் மகாராஜா போன்றோருடன் பேசி, உடன்பாட்டுக்கு வந்து, நெருக்கடியைத் தீர்த்து விட காங்கிரஸ் விரும்புகிறது.

டெல்லி நிர்வாகத்தைப் பொறுப்பு ஏற்று நடத்துகிற ரந்தாவா போன்றவர்கள், பிரிட்டிஷ் காலத்திலிருந்தது போலவே தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படுகின்றனர். ஆயுதம் ஏந்திய ஆர்.எஸ்.எஸ்., இந்து சபா கும்பல்களைப் பிடித்து, ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதற்குப் பதிலாக, அவர்களை விருப்பப்படி அலைய விடுகிற ஆபத்தான வழிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. அவர்களது அமைப்புகள் எவ்விதத் தலையீடுமின்றி நீண்ட காலமாக செயல்பட்டு வருகின்றன.

சுருக்கமாக, காங்கிரஸ் தலைமை, பெருவணிகர்கள் நலன்களையே பிரதிநிதி

# தாக்குதலுக்கான எச்சரிக்கை



தித்துவம்செய்து,ஏகாதிபத்தியத்துடன்சமரசம் செய்து, நிலப்பிரபுத்துவ சக்திகளோடும், வகுப்புவாத சக்திகளோடும் கூட்டுச் சேர்ந்து நிற்கிறது. ஜனநாயக சக்திகளை எழுப்பி நிறுத்துவதையும், கலவரக்காரர்கள் மீது அரசு நிர்வாக அமைப்புகளைப் பிரயோகித்து அடக்குவதையும் காங்கிரஸ் தலைமை விரும்பவில்லை. சர்தார் படேல், சியாமா பிரசாத் முகர்ஜி, பல்தேவ் சிங் போன்றோரால் முன் வைக்கப்பட்ட ஆபத்தான கொள்கைதான் இப்போது மகாத்மா காந்தியின் படுகொலைக்கு நேரடியான காரணமாகும்.

டெல்லியிலும், கிழக்குப் பஞ் சாபிலும் உள்ள முஸ்லிம்களை அகற்றி, பாகிஸ்தானுக்கு அனுப்பாத வரை, அங்கு அமைதி இருக்காது என்பது சர்தார் படேலின் 'விதிமுறை'யாகும். இதுவேதான், அரசு நிர்வாக அமைப்புகளுக்கு உள்ளும், வெளியேயும் இருக்கிற இந்து வகுப்புவாத கும்பலின் கொள்கையுமாகும்.

வகுப்புவாத சக்திகளுக்கு எதிரான அரசு நடவடிக்கைகள், ஜனநாயக சக்திகளின் ஒன்றுபட்ட வகுப்புவாத எதிர்ப்பு ஆகியவைதான் முஸ்லிம் சிறுபான்மை யினருக்கு பாதுகாப்பு அளிக்கும் என்பது மிகத் தெளிவானதாகும். சர்தார் படேலும், அவரது அரசும் கடைப்பிடித்து வரும் கொள்கைகளுக்கு நேர் எதிரானதாகும்.

அதனால்தான், சிறுபான்மையினருக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பது என அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி போட்ட தீர்மானம் இன்னும் காகிதத்திலேயே இருக்கிறது. டெல்லியிலும், குர்கானிலும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் மக்கள் எந்த நேரத்திலும் வேட்டையாடப்படுகிற அச்சத்துடனே வாழ நேர்ந்துள்ளது.

இந்த நிலைமைக்கு எதிராகத் தான், காந்திஜியின் கடைசி உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. இந்த உண்ணாவிரதம் மைய அரசின் கொள்கைகளுக்கு நேர்எதிரான கண்டனக் குரலாகும். அது வகுப்புவாதிகளுக்கு சவால் விட்டது; ஜனநாயக சக்திகளைத் தட்டி எழுப்பியது; இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தியது; சிறுபான்மையினரின் உண்மையான பாதுகாப்புக்கு வழி ஏற்படுத்தியது. ஆனால், இது வகுப்புவாத நோயின் அடையாளத்தை எடுத்துக் காட்டும் எதிர்ப்பை உருவாக்கும் முயற்சியே தவிர, நோய் தீர்க்கும் மருந்தல்ல.

அதே சமயத்தில் இந்து முஸ்லிம் ஒற்றுமை அவசியம் எனும் வலுவான பிரச்சார அலையை அது உருவாக்கி, டெல்லியையும் தாண்டி, நாடு முழுவதற்கும் செய்தியை எடுத்துச் சென்றது. இதன் பிறகுதான், கொலைகாரனின் தாக்குதல் நடைபெற்றது என்பது முக்கியமானதாகும். உடனடியாக தாக்குதலின் இலக்கு மகாத்மாகாந்தி மட்டுமேயல்ல என்பது இப்போது தெளிவாகியுள்ளது. பண்டிட் நேரு, மௌலானா ஆசாத் ஆகியோரையும் கொலை செய்வதற்கு கொலைச்சதி புனையப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல; இந்த கொலைப் பழியை முஸ்லிம்கள் மீது போட்டு, அதன் மூலம் கட்டுக்கடங்காத மாபெரும் இந்து முஸ்லிம் கலவரத்தை தேசத்தில் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சதிகாரர்களின் நோக்கம் காங்கிரஸ் அரசை மாற்றுவதல்ல; அதன் நிறத்தை மாற்றி விடுவதே! அது காங்கிரஸ் அரசாகவே இருந்து கொண்டு, வகுப்புவாதிகளின் விருப்பத்திற்கேற்ப செயல்பட வேண்டும்; எதிர்ப்புரட்சிக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் அது கைக்கருவியாக இருக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம். ஏகாதிபத்திய, எதிர்ப் புரட்சி சக்திகளின் ஏஜெண்டுகள் இதன் மூலம் புரட்சிகர சக்திகளை ஓங்கி அறைந்திருக்கிறார்கள். திட்டத்தின் நிஜமான தன்மை இதுவே.

ஆனால் இந்த சதி, வகுத்தவர்களின் திட்டப்படி நிறைவேறவில்லை. காந்திஜியின் உன்னதமான உயிரைப் பறித்த இக்கொடுஞ் செயல் உண்மையில் அவர்களின் நோக்கங்களுக்கு எதிர் மறையாக மாறி விட்டது. அத்துடன் இச்சதிகாரர்களை அம்பலப் படுத்தியும் விட்டது.

வக்கரித்துப் போன கிரிமினல்களான இந்தச் சதிகாரர்களும், இந்து மகா சபா, ஆர்.எஸ்.எஸ். அனுதாபிகளும், அவர்களது அசிங்கமான இந்தக் கொலைத் திட்டம் ஈடேறியவுடன் சர்க்கரையும், இனிப்பும் கொடுத்துக் கொண்டாடினார்கள். இது ஒரு சமிக்ஞை. மகாத்மாவின் படுகொலை உடனடியாக மக்களை கோபத்தின் உச்சிக்கு இட்டுச் சென்றுள்ளது. அது வகுப்புவாதி களின் அலுவலகங்கள், வீடுகளின் பால் திரும்பியுள்ளது.

தன்னிச்சையாக, உடனடியாக எழுந்த மக்களின் கோபக் கிளர்ச்சி, இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். ஆகியவற்றுக்கு எதிராகத் திரும்பி, அவற்றின் அலுவலகங்களை எல்லாம் அடித்து நொறுக்கியிருக்கிறது. நாடு முழுவதும் இது நடந்துள்ளது. இது வகுப்புக் கலவரங்களாலும், திசை திருப்பல்களாலும், நமது மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பும், ஜனநாயக உள்ளுணர்வும் அழிக்கப்பட்டு விடவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

மகாத்மாவின் இதயத்தைத் துளைத்த குண்டு, மக்கள் இயக்க சக்திகளை கலைத்துப் போடவும், ஒழுங்கு, கட்டுப்பாட்டை உருக்குலைக்கவும், அதன் மூலம் வகுப்புவாதத் தாக்குதலை உள்நுழைக்கவும் சுடப்பட்டதாகும். ஆனால் ஜனநாயக சக்திகளின் உடனடி எழுச்சி, வகுப்புவாதிகளை களத்தில் நிற்க விடாமல் துரத்தியடித்து விட்டது.

அதனால்தான், சதி, குறி தவறி விட்டது என்று நாம் கூறுகிறோம். ஆனால் சதி முறியடிக்கப்பட்டு விட்டது என்று கருதினால், அது தவறாகும். இந்தப் படுபாதக நடவடிக்கையில் அந்தச் சக்திகள் இறங்க முடிந்ததற்கு காரணமாக அமைந்த காங்கிரஸ் தலைமையின் கொள்கைகளோ, நிர்வாக அமைப்புகளின் அணுகுமுறையோ மாறவில்லை.

மக்களின் கோபத்திற்குத் தலைவணங்கிய காங்கிரஸ் தலைமை, வகுப்புவாத வன்முறைகளை வேரோடு அகற்றுவதாகத் தீர்மானம் இயற்றியிருக்கிறது. ஆனால் இந்தத் தீர்மானங்களோடு மட்டும் திருப்தியடையும் நிலையில் இன்று மக்கள் இல்லை. அவர்கள் அரசாங்கத்தை நோக்கி எழுப்பும் கேள்விக்கணைகள், இந்தத் தீர்மானத்தையும், வாக்குறுதிகளையும் இந்த அரசாங்கம் நிறை வேற்றும் என நம்ப மறுக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன.

மத்திய அரசின் உள்துறையும், டெல்லி நிர்வாக அமைப்பும் ஏன் காந்திஜியைப் பாதுகாக்கத் தவறின? ஆர்.எஸ்.எஸ்., இந்து மகா சபாவின் பிரகடனப்படுத்தப்பட்டு விட்ட குறிக்கோள்களை அவர்கள் அறிவார்கள். இந்தப் படுகொலைக்கு ஒரு வாரத்திற்கு முன்னால் மகாத்மாவின் கூட்டத்தில் அவர் மீது கைக்குண்டு எறியத் திட்டமிட்ட கொலைச்சதியை கொலைகாரக் கும்பல் பரிசோதனை செய்து பார்த்திருக்கிறது.

குண்டு எறிய முற்பட்ட மதன்லால் மற்றும் சிலரை போலீஸ் பிடித்து வைத்திருக்கிறது. அப்படியும் மகாத்மாவைச் சுட்டுக் கொல்லச் சதி செய்துள்ளதை இவர்களால் கண்டறிய முடியவில்லை. டெல்லியின் காவல்துறை துணைக் கமிஷனர் ரந்தாவா, மகாத்மாவின் உண்ணாவிரதத்தை ஆதரித்து ஒற்றுமைப் பிரச்சாரம் செய்த கம்யூனிஸ்ட்டுகளைக் கைது செய்வதில் அதிக ஆர்வம் காட்டினார். ஆனால் காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்தில், அவருடைய உயிரைப் பாதுகாப்பதற்கு, இந்த ரந்தாவாவுக்கு நேரமில்லாமல் போய்விட்டது.

இதுவே இந்த துணைக் கமிஷனரும் வகுப்புவாத வெறிக்கு ஆளாகி இருந்ததைக் காட்டுகிறது. இவர் உயர்நிலை அதிகாரியாய் இருக்கும் போது குற்றவாளிகள் சரியாகக் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்த மனிதனின் கைகளில் முஸ்லிம் சிறுபான்மையினர் பத்திரமாக இருக்க முடியுமா?

கொஞ்ச நாட்களுக்கு முன்புதான், உள்துறை அமைச்சர்சர்தார் படேல், ஆர். எஸ்.எஸ். பற்றி உயர்வாகப் பேசி யிருக்கிறார்: "அவர்கள் தமது நாட்டை நேசிக்கும் தேசபக்தர்கள்; அவர்களது சிந்தனை வித்தியாசமாக உள்ளது. அவர்கள் அனைவரையும் காங்கிரஸை நோக்கி அன்பினால் ஈர்க்க வேண்டும்" (லக்னோவில் ஜனவரி6ல் (1948) நிகழ்த்திய உரை).

படுகொலைக்குப் பிறகும் கூட, அந்த வெறியன் ஒரு இந்து மகாசபாக்காரன் என்பதை படேல் வெளிப்படுத்தவில்லை; மாறாக, மன்னிக்கப்பட வேண்டிய இந்து இளைஞன் என்றுமட்டுமே கூறியிருக்கிறார். இந்த உள்துறை அமைச்சர், ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபா ஆகியவற்றின் நடவடிக்கை மீது ஆழமான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பாரா? என்று மக்கள், நியாயமாகவே, சந்தேகப்படுகிறார்கள்.

ஒரு பைத்தியக்காரனின் துப்பாக்கி ரவையிலிருந்து காந்தியைப் பாதுகாக்க முடியாமல் தோற்றுப் போனதாக அரசின் மீது ஜெயப்பிரகாஷ் நாராயணன் குற்றம் சாட்டியிருக்கிறார். இந்த அரசு ராஜினாமா செய்ய வேண்டுமென்றும், நிர்வாக இயந்திரத்திற்குள் பதுங்கியுள்ள வகுப்புவாதிகள் அகற்றப்பட்டு புனரமைப்பு செய்ய வேண்டுமென்றும் அவர்கூறி யிருக்கிறார்.

எல்லாமாகச் சேர்ந்து, காங்கிரஸின் தீர்மானத்தையோ, அதை அரசுநிறைவேற்றும் என்பதையோ மக்கள் நம்பத் தயாரில்லை என்று தெளிவுபடுத்திவிட்டன. இன்றைய மத்திய அரசு முற்றிலும் திவாலாகிவிட்டது என்பதையும், வகுப்புவாதத்திற்கும் இணங்கி, ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டு செல்கிறது என்பதையும் நிகழ்ச்சிகள் வெட்ட வெளிச்சமாக்கி விட்டன.

இந்தக் கொள்கைகளை முன் மொழிந்த சர்தார் வல்லபாய்படேல், அவரது வகுப்புவாத நண்பர்கள் குறிப்பாக ஷியாமா பிரசாத் முகர்ஜி, சர்தார் பல்தேவ் சிங் மற்றும் டெல்லி டெபுடி கமிஷனர் ரந்தாவா ஆகியோர்தான் மகாத்மா காந்திஜியின் படுகொலைக்கு முக்கிய காரணமானவர்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

மகாத்மா காந்தியின் படுகொலை, வகுப்புவாத தாக்குதலுக்கான எச்சரிக்கையாகும்; ஜனநாயக சக்திகளுக்கு விடப்பட்ட சவாலாகும். நாடு முழுக்க தன்னெழுச்சியாக நடைபெற்ற ஆர்.எஸ். எஸ்.ஸுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மூலம், மக்கள் இந்தச் சவாலைச் சந்திக்கத் தயாராக உள்ளனர் என்பதைக் காட்டியுள்ளனர்.

◆ இந்து மகாசபாவுக்கும், ஆர்.எஸ். எஸ்.ஸுக்கும் எதிராய் எழுந்துள்ள இந்த தன்னெழுச்சியான கோபத்துக்கு உருவம் தந்து, அதனை இந்த அமைப்புகளுக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட அரசியல் போராட்டமாக மாற்ற வேண்டியது அவசியம்.

◆ இந்த அமைப்புகள் பெருவணிக, நிலப்பிரபுத்துவ கருவிகளாக உள்ள வர்க்கச் சார்பையும், அவற்றின் பாசிச, இனவெறி, எதிர்ப் புரட்சி அரசியலையும் அம்பலப்படுத்த வேண்டியது அவசியம்.

◆ அனைத்து இடதுசாரி சக்திகளும், தொழிலாளர், விவசாயிகள் அமைப்புகளும், இது ஒரு ஜனநாயக இளைஞர் இயக்கத்தைக் கட்டியமைக்க வேண்டிய வாய்ப்பான தருணம் என்பதை உணர வேண்டும்.

இளம் தொழிலாளர், இளம் விவசாயிகள் அமைப்புகளை உருவாக்கி, அவற்றின் மூலம் ஜனநாயக எண்ணங்கொண்ட இளைஞர்களை திரட்டி, வகுப்புவாதத்துக்கு எதிரான போரில் ஈடுபடுத்த வேண்டும். இந்தப் போர் மிட்டா மிராசுத்தனம், இளவரசுகள், பெருவணிகர்களுக்கு எதிரானது; ஜனநாயகப் புரட்சிக்கானது என்பதை உணர வேண்டும்.

◆ எல்லாவற்றுக்கும் மேலாக, அனைத்து இடதுசாரி, ஜனநாயக சக்திகளும் ஒன்று சேர்ந்து, மத்திய அரசில், சர்தார் வல்லபாய் தலைமையில் உள்ள, வகுப்புவாதத்திற்கு ஆதரவான அனைத்து மந்திரிகளும் அகற்றப்பட வேண்டும்; நிர்வாகத்தில் வகுப்புவாதம் சார்ந்த அதிகாரிகள் டெல்லி டெபுடி கமிஷனர் ரந்தாவா போன்றவர்கள் நீக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசைக் கோரி வலியுறுத்த வேண்டும்.

இவையெல்லாம் செய்யப்படாமல் போனால், காந்தியைப் படுகொலை செய்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணையும், தண்டனை நடவடிக்கைகளும் வகுக்கப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. வகுப்புவாத புதிய தாக்குதல் இனிமேலும் தடுத்து நிறுத்தப்படும் என்பதற்கும் எந்த உத்திரவாதமும் இல்லை.

தமிழில்: டி.எம். மூர்த்தி
தொடர்புக்கு: 73971 30367



காந்தியுடன் காங்கிரஸ் தலைவர்கள்

# வேலையில்லா திண்டாட்டம் அதிகரிப்பு ஊழியர்களின் ஊதியத்தில் சரிவு



த.லெனின்

**அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், ஒரு முழக்கம் வாக்காளர்களை கவர்ந்ததாம் 'மோடி ஜி உத்தரவாதம்'. இது மூன்று இந்தி பேசும் மாநிலங்களில் பாஜக வெற்றிபெற உதவியதுடன் பிரதமர் நரேந்திர மோடியின் பிம்பத்தை பலப்படுத்தியதாம்.**

இத்தேர்தல்களுக்கு முன்பு மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை கொச்சைப்படுத்தியவர்தான் பிரதமர் மோடி. ஆனால் அவரே அண்மையில் நடைபெற்ற மாநில சட்டமன்றத் தேர்தல்களில் பல்வேறு இலவச வாக்குறுதிகளை அளித்துத்தான் வாக்குகளை கவர்ந்தார்.

எனவே அதனையே தனது 2024 நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரமாக அரசு செலவில் இன்று செய்து வருகின்றனர்.

### கொடுத்த வாக்குறுதிகள் என்னவாயிற்று?

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மோடி கொடுத்த வாக்குறுதிகள் என்னவாயிற்று? ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை, கருப்பு பணத்தை ஒழிப்பேன் அதை ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் தலா ரூ.15 லட்சம் சேர்ப்பேன் என்ற உத்தரவாதங்கள் பின்பு அவர்களாலேயே மறுக்கப்பட்டு அவை தேர்தலுக்கான வெறும் முழக்கங்களே என்று கூற வைத்தது. எனவே தேர்தலுக்கு தேர்தல் ஒவ்வொரு முறையும் புதிய அவதாரங்களை எடுப்பது அவர்களின் வாடிக்கையே ஆகும். அந்த முறையில் தான் இப்போது இந்த விளம்பரங்கள் பெரும் பொருட்செலவில் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன.

ஆனால், நாடு முழுவதும் பொருளாதார வளர்ச்சி குன்றி வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது. புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வில்லை. மாறாக ஏற்கனவே இருந்த வேலை வாய்ப்புகளும் பறிக்கப்பட்டு விட்டன. இதனால் வறுமை அதிகரித்துள்ளது. வாங்கும் சக்தி குறைந்து போய் விட்டது.

### தரைமட்டமாக்கப்பட்ட தரவுகள்!

45 ஆண்டுகளாக இல்லாத வேலையில்லாத திண்டாட்டம் தற்போது வந்திருக்கிறது என்று தேசிய மாதிரி கணக்காய்வு மையத்தின் தலைவர் (என்.எஸ்.எஸ்.ஓ) பி.சி.மோகனன் கூறியுள்ளார். மேலும் அவர். "எங்கள் பணியை செய்ய முடியவில்லை. அண்மைக் காலங்களில் எங்கள் துறை ஓரம் கட்டப்படுவதோடு, நாங்கள் சொல்வதை யாரும் கேட்கத் தயாராக இல்லை. இதனால் பதவி விலகிய சில வாரங்களில், ஏறத்தாழ உலகம் முழுவதிலும் இருந்து 108 பொருளாதார வல்லுநர்கள் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதினர்.

பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் அபிஜித் பானர்ஜி, எஸ்தர் டஃப்லோ தம்பதியும் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டிருந்தனர். அந்தக் கடிதத்தில், "இந்தியாவின் புள்ளியியல் துறை மீதான தேசிய, சர்வதேச நம்பிக்கை தகர்ந்து வருகிறது. அதைவிட பொருளாதார திட்டங்களை வகுப்பதற்காக சேகரிக்கப்படும் புள்ளியியல் தரவுகள், அரசியல் ரீதியாக மாற்றப்படுகின்றன" என வருத்தம் தெரிவித்திருந்தனர்".

நோய் நாடி நோய் முதல் நாடும் இந்த முயற்சிகள் தான் ஒட்டுமொத்த சமூகத்தின் வறுமையை ஒழிக்க, வேலைவாய்ப்புகளை உருவாக்க, கிராமப்புற வளர்ச்சிக்கு என புதிய திட்டங்களை உருவாக்க இயலும் . இதுவே உலகம் முழுவதும் அனைவரும் ஏற்றுக்கொண்ட மிக முக்கிய வழிமுறையாகும். ஆனால் மோடி அரசுக்கோ தாங்கள் பீற்றிக்கொள்ளும் வளர்ச்சி மாதிரிகளுக்கு இது வேட்டு வைத்து விடும் என்று அந்த தரவுகளை வெளியிடாமல் மறைத்து வருகின்றனர்.

### ஐ.எம்.எஃப்பின் குற்றச்சாட்டு!

சர்வதேச நிதி நிறுவனமான ஐ.எம்.எஃப் இந்தியாவில் இருந்து வெளிவரும் புள்ளிவிவரங்கள் தாமதமாகவே சமர்ப்பிக்கப்படுவதாகவும், சில சமயங்களில் முறையாக சமர்ப்பிக்கப்படுவதில்லை என்றும் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அறிவித்தது, இது ஒன்றிய பாஜக அரசுக்கு சர்வதேச அளவில் மிகப்பெரிய அவமானமாக அமைந்தது.

### வேலையின்மை அதிகரிப்பு ஐ.எல்.ஓ குற்றச்சாட்டு!

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு, உண்மையான ஊதியத்தில் சரிவு என ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொழிலாளர் அமைப்பு(ஐஎல்ஓ) எச்சரிக்கிறது.

2023 ஆம் ஆண்டில் பெரும்பாலான ஜி20 நாடுகளில் உண்மையான ஊதியங்கள் வீழ்ச்சியடைந்தன, ஏனெனில் ஊதிய விகிதங்கள் ஏற்கனவே உள்ள பணவீக்கத்துடன் தன்னை தக்கவைக்கத் தவறியது. இதன் காரணமாக மேலும் 10 லட்சம் தொழிலாளர்களை தீவிர வறுமைக்கு தள்ளுகிறது.

வேலையின்மை விகிதம் 2024ல் மேலும் அதிகரிக்கும் என்றும், அதே நேரத்தில் வளர்ந்து வரும் சமூக சமத்துவமின்மை அதாவது ஏழை பணக்காரர் இடைவெளி பெரும் கவலை தரத்தக்க அம்சமாக இருக்கும் என்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த அமைப்பின் 'உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்: போக்குகள் 2024' என்பதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேலையின்மை மற்றும் வேலை இடைவெளி இரண்டும் கொரோனா பரவிய காலகட்டத்திற்கு முந்தைய நிலைக்குக் கீழே குறைந்துள்ளன. ஆனால் உலகளாவிய வேலையின்மை 2024 இல் உயரும், வளர்ந்து வரும் சமத்துவமின்மை மற்றும் தேக்கமான உற்பத்தி ஆகியவை கவலைக்குரியவை என்று ஐ.எல்.ஓ குறிப்பிட்டுள்ளது.

இதன் கூற்றுப்படி, இந்தியாவில், உண்மையான ஊதியங்கள் மற்ற ஜி20 நாடுகளுடன் ஒப்பிடும்போது "நேர்மறையாக" உள்ளன. ஆனால் அதிக மக்கள் தொகை கொண்ட சீனத்தோடு ஒப்பிடும்போது இது மிக குறைந்த அளவிலேயே உள்ளது என்பதை நாம் பார்க்க முடியும்.

2023 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சூழல் மோசமடைந்தது. புவி சார் அரசியல் பதற்றங்கள் மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம் ஆகியவை மத்திய வங்கிகளில் அதனை சரிசெய்ய அதாவது வட்டி அதிகரிப்பு உள்ளிட்ட செயல்பாடுகளில் அடிக்கடி அதி வேகமான நகர்வுகளைத் தூண்டியது" என்று அது கூறியது.

### மிதமான மீட்பு

2023ல் உலகளாவிய வேலையின்மை விகிதம் 5.1% ஆக இருந்தது. 2022 ஆண்டோடு ஒப்பிட்டால் ஒரு சிறிய முன்னேற்றம். ஆனால் இது உலகளாவிய வேலை இடைவெளியை அதிகரித்தது. இதன் காரணமாக ஏற்கனவே உள்ள வேலை யில்லா பட்டாளத்தோடு மேலும், 43.5 கோடி பேர் புதிதாக சேர்ந்து விடுவார்கள் என்று ஐ.எல்.ஓ அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் சந்தை பங்கேற்பு விகிதங்களும் கொரோனா காலகட்டத்திற்கு பிறகு குறைந்த அளவில் மீண்டு வந்தன. 2023ல் ஏற்றத்தாழ்வுகள் ஓரளவு தளர்ந்தாலும், தொழிலாளர் சந்தை ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தது வருகின்றன.

மேலும், 2023 ஆம் ஆண்டில், தீவிர வறுமையில் வாழும் தொழிலாளர்களின் எண்ணிக்கை வாங்கும் திறன் சமநிலை (HHH) விதிமுறையின் படி ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 2.15 டாலருக்கும் குறைவாக சம்பாதிப்பது என்பதாகும் இதனால் உலகளவில் வேலையின்மை மேலும் தீவிரமாக அதிகரித்துள்ளது" என்றும் கூறியுள்ளது.

### தனிநபர் ஊதிய வளர்ச்சி

"சீனா, ரஷ்ய கூட்டமைப்பு நாடுகள், மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளில் கடந்த 2023ல் நேர்மறையான உண்மையான தனிநபர் ஊதியவளர்ச்சியை அனுபவித்தன. சீனா மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு ஆகியவற்றில் வலுவான ஊதிய உயர்வுகள் இருந்தன, அங்கு தொழிலாளர் உற்பத்தித்திறன் வளர்ச்சி 2023ல் ஜி20 நாடுகளை காட்டிலும் அதிகமாக இருந்தது. இந்தியா மற்றும் துருக்கியில் உண்மையான ஊதிய வளர்ச்சி இருந்தது. ஆனால் அந்த நாடுகளோடு ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவானதாகவே உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

### இந்தியா என்ன செய்ய வேண்டும்?

தொழிலாளர் காலமுறை கணக்கெடுப்பின்படி (PLFS), 2018 – 2019 ஆம் ஆண்டுகளில் பெண்களின் வேலை பங்கேற்பு 21.9% ஆனால் இது 2022 – 23 ஆண்டுகளில் 15.9% ஆக குறைந்துவிட்டது.

அமைப்புசாரா பணிகளில்தான் பெண்கள் 95% க்கு மேல் பணி புரிகின்றனர். ஆஷா பணிகளில் ஒரு கோடி பேரும் மதிய உணவு திட்டங்களில் பல லட்சம் பேரும் மிகக் குறைந்த ஊதியத்தில் வேலை செய்கின்றனர். உண்மையில் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள். நாரி சக்தி, பெண்கள் சக்தி என்று பிரதமர் பேசினாலும் இந்த முறைகளை மாற்ற நாதி இல்லை என்பதைத்தான் சூழல்கள் விளக்குகின்றன.

கிராமப்புற ஏழை எளிய விவசாய தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வந்த நூறு நாள் வேலைத் திட்டம் இப்போது முடக்கப்பட்டு வருகிறது. அதற்கான நிதியும் தொடர்ந்து வெட்டப்பட்ட காரணத்தால் மேலும் பல சுமைகளை அது தாங்கி வருகிறது. இது கிராமப்புற வேலையின்மையை மேலும் அதிகரிக்கவே செய்கிறது.

பொதுவாக, விவசாயத்தில் இருந்து உற்பத்தித் துறைக்கும், பின்பு அவர்கள் சேவை துறைக்கும் மாறுவார்கள். இதுதான் உலகம் முழுவதும் நாம் காணும் காட்சி. இன்று உலகின் தொழிற்சாலையாக சீனம் திகழ்கிறது. உலகை வெல்லும் புதிய தொழில்நுட்பத்தை அது உருவாக்கி வெற்றிகரமாக அரங்கேற்றி வருகிறது.



வேலையில்லாத் திண்டாட்டம்




இதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகளையும் பொருளாதார வளர்ச்சியையும் அது கண்டுள்ளது.

ஆனால் இந்தியாவிலோ கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்பு உலகத்தரம் வாய்ந்த அறிவியல் மற்றும் பொறியியல் நிறுவனங்கள் பெரும் முதலீட்டோடு உருவாக்கப்பட்டன. இந்தியாவின் தொழில் நுட்பக்கழகங்கள் மென்பொருள் துறையில் உலகளாவிய போட்டி போடும் சக்தியாக மாற்றி உள்ளது. இன்று அவர்கள் பலர் அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களின் தலைமைப் பதவிகளில் அதிக ஊதியத்தோடு அலங்கரித்து வருகிறார்கள்.

விண்வெளி துறையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை நாம் கண்டிருக்கிறோம். பெரிய முதலீட்டோடு வரும் திறன்பேசி தொழிற்சாலைகள் மதிப்பு கூட்டும் சேவைகள் ஆகியவற்றில் வெகு சிலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி இருக்கிறோம். ஆனால் உலக அளவில் அதிக மக்கள் தொகை கொண்ட நமது நாட்டிற்கு இது போதாது. எனவே விவசாயத்தை விஞ்ஞான ரீதியாக மாற்றி அமைப்பதற்கும் அதன் மூலம் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கும் ஒன்றிய அரசு முதலீடுகளை அதிகரிக்க வேண்டும்.

குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்பு தரும் சிறு, குறு, நடுத்தர தொழில்களை நலிவில் இருந்து காப்பாற்றி அதனை ஊக்கப்படுத்திட உள்ளும் புறமும் செயலாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதை விடுத்து விட்டு அதானிகளுக்கும் அம்பானிகளுக்கும் குடை பிடிப்பது நாட்டுக்கு உதவாது. வேலை வாய்ப்பு தராது. எனவே மோடியின் உத்தரவாதங்கள் உண்மையில் உதவாத வெற்று ஆரவாரங்கள்.

தொடர்புக்கு 9444481703



எம்.ரவி

## மாமேதை லெனின் அவர்களின் 100ஆம் ஆண்டு

# லெனினும் - லெனினியமும் 1

**ருஷ்யாவில் ஆகாவென்றெழுந்த யுகப்புரட்சிக்கு தலைமையேற்றவரும் உலகின் முதன்முதலாக நிறுவப்பட்ட சோசலிச ஆட்சிக்கு தலைமை தாங்கியவருமான மாமேதை விளாதீமிர் இலியச் லெனின் கடந்த 21.1.1924 அன்று மரணமடைந்தார். தற்போது அவரது நூறாவது ஆண்டு நினைவு தினம்.**

மாமேதை லெனின் அவர்கள் மனித குலத்துக்கு ஆற்றிய மகத்தான பணியையும், அவர் முன்வைத்து நடைமுறைப்படுத்திய லெனினியத்தையும் இந்த நேரத்தில் நினைவு கூறுவோம்.

உலகில் மனித குலம் உருவாகி வளர்ச்சி பெற்று வருகையில் மனித சமுதாய வாழ்க்கையில் பல சிக்கல்கள், துன்பங்கள் ஏற்பட்டன. குறிப்பாக பசி, பட்டினி, வறுமை, சுரண்டல், அடக்குமுறை, ஒடுக்குமுறை போன்ற கொடுமைகள் நிகழ்ந்தன.

மனித குலத்தில் தோன்றிய மகத்தான மனிதர்களில் சிலர் இந்த கொடுமைகளைக் கண்டு கடும் துயரம் அடைந்தனர். உலகில் உள்ள எல்லா மனிதர்களும் துன்பமில்லாமல் இன்பமாக மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். இதற்கான கருத்துக்களை முன் வைத்தனர். பல முயற்சிகளை மேற்கொண்டனர். சில மதங்களை மார்க்கங்களை நிறுவினர். இவ்வாறு சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேலாக பல முயற்சிகள் செய்தும் மனித குலத்தின் சிக்கல்களை தீர்க்க முடியவில்லை

இதே வேளையில் மனித சமூக வளர்ச்சியில் பல சமுதாய மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டே இருந்தன. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு உலகில் தொழில் புரட்சி ஏற்பட்டது. இதனால் நிலப்பரப்புத்துவ சமுதாய அமைப்பு வீழ்ந்து முதலாளித்துவ சமூக அமைப்பு உருவானது.

இந்த முதலாளித்துவமானது புதிய வகையில் மனிதனை மனிதன் சுரண்டுவதையும், அடக்குமுறை, ஒடுக்குமுறையும் நிகழ்த்தி வந்தது.

இந்தக் காலகட்டத்தில் மனிதகுலச் சிக்கல்களை, துன்பங்களை தீர்ப்பதற்கு முந்தைய கருத்துக்களை அறிவியல் சார்ந்த நடைமுறைகளாக மாற்ற வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் ஏற்பட்டது.

புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், பல தத்துவங்களின் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, வர்க்கமாக திரண்டு கொண்டிருந்த தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சிகரமான போராட்டங்கள் ஆகியவற்றின் தாக்கத்தால் மார்க்சியம் என்ற அறிவியல் ஞானம், அரசியல் விஞ்ஞானம் வளர்ந்தது.

‘‘கற்பனைக்கு பதிலாக அறிவியலையும்‘‘ ‘‘கண்ணீருக்கு பதிலாக புரட்சியையும்‘‘ அந்த மார்க்சியம் முன் வைத்தது. வர்க்கத்தையும், சோசலிசத்தையும் அதற்கடுத்து விஞ்ஞான கம்யூனிசத்தையும் படைப்பதற்கான வழிகாட்டுதல்களை மார்க்சியம் வழங்கியது.

உலகத்தில் முதலாளித்துவம் உருவாகியதோடு தொழிலாளி வர்க்கமும் தோன்றியது அந்தத் தொழிலாளி வர்க்கம் தன்னைச் சுரண்டும் முதலாளியத்தை எதிர்த்துப் போராடத் துவங்கியது. இந்த போராட்டங்களின் மூலம் தொழிலாளர் இயக்கங்கள் பெற்ற அனுபவங்கள் தத்துவரீதியாக பொதுமைப்படுத்தப்பட்ட தொகுப்பாய்வு தான் மார்க்சியமாக மலர்ந்தது.



மேலும், ஜெர்மானிய தத்துவஞானம், இங்கிலாந்தின் அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோசலிச கருத்துக்கள் ஆகியவற்றின் மூலம் கிடைத்த மகத்தான சிந்தனைக் கருத்துக்களை மார்க்சியம் உள்வாங்கிக் கொண்டது.

இவ்வாறு உலகில் நீண்ட நெடிய காலமாக இருந்த வந்த பல்வேறு மதிப்புமிக்க கருத்துக்களைப் பகுத்துப்பாய்ந்து, வடித்தெடுத்து செழுமைப்படுத்திய புரட்சிகரமான தத்துவ போதனையை மாமேதைகளான கார்ல் மார்க்சின், பிரெடெரிக் எங்கல்சும் உலகுக்கு அளித்தனர்.

மார்க்சும், ஏங்கல்சும் பொதுமக்களுடன் இடையூறாத தொடர்புகளைக் கொண்டவர்களாகவும், மாபெரும் புரட்சி வீரர்களாகவும், பாட்டாளி வர்க்கத்தின் தளபதிகளாகவும் விளங்கினர்.

உலகில் விஞ்ஞான சோசலிசத்தை படைத்திடவும், தொழிலாளர் வர்க்கத்தை ஒன்று சேர்க்கவும், வர்க்க ஏற்ற தாழ்வுஎளை ஒழிக்கவும் ஒரு புரட்சிகரமான அரசியல் கட்சி தேவை என்பதை உணர்ந்த மார்க்சும், ஏங்கெல்சும் சில புரட்சியாளர்களுடன் சேர்ந்து 1847 ஆம் ஆண்டில் ‘‘கம்யூனிஸ்ட் கட்சியைத்’’ துவக்கினார்கள். அதன் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் 1848 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ‘‘கம்யூனிஸ்ட் அறிக்கை’’ யின் மூலம் பிரகடனப்படுத்தினார்கள்.

இதன் தொடர்ச்சியாக உலக தொழிலாளர் அகிலம் என்பது உருவாக்கப்பட்டது. பல நாடுகளில் தொழிலாளர்களின் கட்சிகள் துவங்கப்பட்டன. 1848 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜெர்மன் நாட்டில் கோலன் நகரில் ‘‘புரட்சிகரமான எழுச்சி’’ ஏற்பட்டது. 1871 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாரிஸ் நகரத்தில் ‘‘பாட்டாளி வர்க்க புரட்சி’’ நடைபெற்றது. 1886 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் சிகாகோ மாநகரில் 8 மணி நேர வேலைக்கான ‘‘மே’’ தினப் போராட்டம் நடைபெற்றது.

இவ்வாறு உலகின் பல பகுதிகளில் போராட்டங்கள், எழுச்சிகள், புரட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்த காலகட்டத்தில் மாமேதை கார்ல் மார்க்ஸ் 1883 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி மரணம் அடைந்து விட்டார்.

19ஆம் நூற்றாண்டு முடியும் தருவாயில் இருந்தபோது, உலகில் முதலாளித்துவம் உலக செல்வ வளங்களை போட்டி போட்டு கொள்ளையடிக்கும் ஏகாதிபத்தியமாக உருக்கொண்டது. ஏகாதிபத்திய முதலாளித்துவத்திற்கு எதிராக பாட்டாளி வர்க்க புரட்சிகள் துளிர்விட்டு கொண்டிருந்தன.

இத்தகைய காலகட்டத்தில் மார்க்சியத்தை முழுமைப்படுத்தி, செழுமைப்படுத்தி கட்டிக்காத்து பாட்டாளி வர்க்கத்திற்கு அரசியல் வழிகாட்டி தலைதாங்கி வந்த மாமேதை பிரெடெரிக் ஏங்கெல்ஸ் அவர்கள் 1895 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் தேதி மரணமடைந்துவிட்டார். ஏங்கெல்சின் மரணம் கம்யூனிச புரட்சிகர இயக்கத்திற்கு மிகப்பெரும் சோதனையை ஏற்படுத்தியது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் பல புதிய பிரச்சனைகள் தொழிலாளி வர்க்கத்தின் முன் எழுந்தன. மாலுமி இல்லாத கப்பல் கடலில் தத்தளிப்பது போல கம்யூனிச இயக்கம் தத்தளித்தது.

ஒரு புதிய வரலாற்றுக் கட்டமான ஏகாதிபத்திய முதலாளித்துவ வளர்ச்சி கட்டத்தில் தொழிலாளி வர்க்க இயக்கத்திற்குள் இருந்த சந்தர்ப்பவாதிகளும், சுயநலமிகளும் மார்க்சியத்தை சிதைக்கும் முற்பட்டார்கள். மார்க்சியம் மிக கடுமையான சோதனைக்கு உள்ளாயிற்று. மார்க்சியத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும், அதன் பிரதான அடிப்படைகளையே பரிசீலிக்க வேண்டும் என்றும் பெர்ன்ஷ்டைன் என்பவரும் அவரது சார்பாளர்களும் பகிரங்கமாக செயல்பட்டனர்.

இன்னொரு புறம் கவுத்ஸ்கி என்பவரும் அவரை சார்ந்தவர்களும் தங்களை ‘‘மார்க்சிஸ்ட்டுகள்’’ என்று தங்களை அழைத்துக் கொண்டு மார்க்சிய போதனையை, மனித வாழ்க்கையுடன் சம்பந்தமில்லாத வறட்டு சூத்திரங்களாகவும், முழக்கங்களாகவு, மேற்கோள்களாகவும் திருத்திக் குழப்பினார்கள்.

இந்த திருத்தல்வாத சந்தர்ப்பவாத குழுக்களிடமிருந்து மார்க்சியத்தை பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கு உரிய வகையில் மார்க்சியத்தை செழுமைப்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

இந்த இக்கட்டான தருணத்தில் தான் ‘‘விளாதீமிர் இலியச் லெனின்’’ என்னும் மாமேதை கம்யூனிச இயக்கத்திற்கு மிகச்சிறந்த பொக்கிஷமாக கிடைத்தார்.

மகத்தான புரட்சிகர போதனையான மார்க்சியத்தை திரித்துப் புரட்டி, கொச்சைப்படுத்தி கீழ்மைபடுத்துவதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது அகிலத்திலும் சில நாடுகளில் இருந்த சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியிலும் இருந்த ‘‘வலதுசாரி’’ மற்றும் ‘‘இடதுசாரி’’ சந்தர்ப்பவாதிகள் செய்த முயற்சிகளை தீவிரமாகவும், தொடர்ச்சியாகவும் எதிர்த்துப் போராடி முறையடித்து மார்க்சியத்தின் தூய்மையை பாதுகாத்தவர் தான் இந்த மாமேதை லெனின்.

– தொடரும்

# மூத்த தலைவர் தா.பாண்டியன் அவர்களின் மகள் அருணா மறைவு!

## தலைவர்கள் நேரில் அஞ்சலி!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா பாண்டியன் அவர்களின் மகள் அருணா காலமானார். அவரது மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா. கருணாநிதி, ஜனசக்தி லெனின், கட்சியின் அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா. விஜயகுமார், கட்டட சங்க மாநிலச் செயலாளர் இரா. துரைசாமி, மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளர் மாரியப்பன், தென் சென்னை எஸ்.கே. சிவா, எஸ்.ஏழுமலை, மத்திய சென்னை ஏ ஐ டி யு சி மு. சம்பத் உள்ளிட்ட தோழர்கள் அஞ் சலி செலுத்தினர்.



# மதுரை துணை மேயர் வீடு புகுந்து தாக்குதல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

மதுரை துணை மேயர் வீடு புகுந்து தாக்குதல் வன்மையாக கண்டிக்கிறோம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

மதுரை மாநாகராட்சியின் துணை மேயர் திரு.தி.நாகராஜன் வீட்டில் சமூக விரோதிகள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ள வன்செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

மக்கள் பிரதிநிதியாக செயல்பட்டு வரும் தி.நாகராஜன் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். நீண்ட காலமாக பொது வாழ்வில் இருப்பவர். இவரது வீட்டில் நுழைந்து தாக்குதல் நடத்தும் அளவிற்கு சென்றுள்ளனர் என்பதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்து, அவர்களில் எவரும் சட்டத்தின் சந்து, பொந்துகளையும், இண்டு, இடுக்களையும் பயன்படுத்தி தப்பி விடாமல் வழக்கை உறுதியாக நடத்தி தண்டிக்க வேண்டும். இந்த தாக்குதலுக்கு பின்னால் உள்ள காரணங்களும் முழுமையாக விசாரித்து எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றச்செயல்கள் நடக்காமல் தடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு தமிழ்நாடு அரசையும், காவல்துறையினையும் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## விவசாயிகள் ஒன்றிய மாநாடு




தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருத்துறைப்பூண்டி, ஒன்றிய 25வது மாநாடு மேட்டுப்பாளையத்தில் சங்கத்தின் ஒன்றிய தலைவர் கே.பாலு மற்றும் எம்.ஜமுனா தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில் மூத்த தோழர் விளக்குடி எம்.சிவஞானம் சங்க கொடியினை ஏற்றிவைத்தார். மூத்த தலைவர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. மாநாட்டினை துவக்கிவைத்து பேசினார். மாநில பொதுசெயலாளர் பி.எஸ்.மாசிலாமணி மாநாட்டினை வாழ்த்தியும், புதிய பொறுப்பாளர்களை அறிமுகம் செய்தும் பேசினார். இதில் க.மாரிமுத்து எம்.எல்.ஏ., கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., கே.ஆர்.ஜோசப், கே.ராஜா, வி.ஜவஹர் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவராக ஜி.சுப்பிரமணியன், செயலாளராக டி.கருணாநிதி, பொருளாளராக வி.பி. ஞானசேகரன், துணை செயலாளராக ஜெ.கணேஷ் மற்றும் துணை பொறுப்பாளர்களாக ஸ்டாலின், மகேந்திரன், ஜமுனா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## கட்டிட சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு

மதுரையில் ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கம் பகுதி குழு கூட்டம் எம்.பாலமுருகன் தலைமையில் ஜெய்ஹிந்த்புரத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சங்கத்தின் மதுரை மாவட்ட செயலாளர் எம். இருளாண்டி கலந்து கொண்டார்.

இந்த பகுதி குழுவின் நிர்வாகிகளாக தலைவர் எஸ்.சேகர், செயலாளர் எம்.பாலமுருகன், பொருளாளர் பி.குருசாமி, நிர்வாக குழு உறுப்பினர்களாக ஜி.பாலன், ஏ.பாஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நூறு நாள் வேலை சம்பள பாக்கி வழங்ககோரி மனு

தமிழ்மாநில தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக தினசம்பளம் வழங்கப்படவில்லை, பொங்கல் பண்டிகைக்கு முன் நிலுவை பாக்கியை வழங்க வேண்டி தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளரை சந்தித்து மனு அளிக்கப்பட்டது.

இதில் சங்க மாநில செயலாளர் ஜெ பிரதாபன்,மாவட்ட செயலாளர் எஸ். தேவராசன், சங்க மாநிலக்குழு உறுப்பினர்கள் ஜி. மாதையன், அலமேலுஎத்துராஜ், மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் கமலாமூர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் கா. சி. தமிழ்குமரன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

கரூர் மாவட்ட மூத்த தலைவர்

## எம்.சேஷன் நினைவு தின பொதுக்கூட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கரூர் மாவட்ட முதுபெரும் தலைவரும், கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவருமான எம்.சேஷன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுதினகொடியேற்றுவிழா 03.01.2024 அன்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தாந்தோணி ஒன்றிய முன்னாள் செயலாளர் ஆர்.ராமசாமி தலைமை வகித்தார். கட்சியின் மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி சிறப்புரையாற்றினார். கரூர் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன், முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம், மாவட்ட துணை செயலாளர் க.சண்முகம், எஸ்.மோகன் குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

### வினாடி - வினா விடைகள்

1. மூன்று முறை – 1948, 1975, 1992
2. தூக்கு மேடைக் குறிப்புகள்
3. கர்ட் வால்ட்ஹெய்ம் (ஆஸ்திரியா)
4. 1948 நவம்பர் 20
5. ரைனிஷ் செய்டுங் (1842 அக்டோபர் முதல் 1843 மார்ச் வரை)
6. அறிவியல் முறைப்படியான ஆய்வின்படி கி.மு. 950

தேசிய பேரிடர் நிதியை ஒன்றிய அரசு உடனே வழங்க கோரி

# தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை தேசிய பேரிடர் பாதித்த பகுதியாக அறிவித்து, தமிழக அரசு கோரியுள்ள பேரிடர் நிதியை உடனடியாக ஒன்றிய அரசு வங்க வேண்டும் என்பன வலியுறுத்தி ஜனவரி 8 அன்று தமிழகம் முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக நடைபெற்றது.




கோவை




திருவள்ளூர்



கரூர்

**கரூர்:** கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு கட்சியின் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன் தலைமையில் மாநிலந் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம்,மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன் குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.குப்புசாமி, எம்.லட்சுமி காந்தன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**குமரி:** நாகர்கோவில் பூங்கா அருகே நடைபெற்ற ஆர்பாட்டத்திர்க்கு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார். கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜி.சுரேஷ்மேசியதாஸ் மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஆர்.செல்வராணி, வி. அருள்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு தாமரை குளம் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் வி.அருணாசலம் தொடங்கி வைத்தார். அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம், தோவாளை தாலுகா செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம், கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எஸ்.அனில்குமார், சிறப்புரை ஆற்றினார்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி பஜாரில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் என். ஜீவா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கட்சியின் மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள் என். எஸ். பிரதாப் சந்திரன், பி. வி. செந்தில் , ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் கே. கிருஷ்ணன், கே.வி. செங்கொடிச் செல்வன், பி. தவபாலன், பாலகிருஷ்ணராவ், ஜீ.சமநீதி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**கோவை:** மத்திய தந்தி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தை விளக்கிப் பேசிய கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வி.எஸ்.சுந்தரம், கே.எம்.செல்வராஜ், பி.மௌனசாமி, கே.ரவீந்திரன், கே.வெங்கடாசலம், வால்பாறை எஸ்.மோகன், மு.வ.கல்யாணசுந்தரம், மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், பிரபா ரவீந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**கும்பகோணம்:** கும்பகோணம் தலைமை அஞ்சலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தேசிய குழு உறுப்பினர் வை. சிவபுண்ணியம் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார்.

மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ஏ.ராஜேந்திரன், ஏஐடியூசி மாநில செயலாளர் ஆர்.தில்லைவனம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சாமு. தர்மராஜன், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் க.சுந்தர்ராஜன், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் பா.சரண்யா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்று ஒன்றிய அரசு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

## ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பா.விஜயபாரதி மாரடைப்பால் மரணம்!

இரா.முத்தரசன் இரங்கல்!

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற - பென்னாகரம் - பா.விஜயபாரதி மாரடைப்பால் மரணம் அடைந்தார். அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டம் பென்னாகரம் நகரச் செயலாளர் பா.விஜயபாரதி (50) 08.01.2024 அன்று பேரிடர் நிவாரண நிதி கோரி நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நேரத்தில், மாரடைப்பால் காலமானார் என்ற துயரச் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பா. விஜயபாரதி பென்னாகரம் அருகில் உள்ள கூத்தப்பாடியை சேர்ந்தவர். சிறு வயது முதலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியால் ஈர்க்கப்பட்டு, அதில் இணைந்து செயல்பட்டு வருகிறார். கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் பென்னாகரம் நகரச் செயலாளர் பொறுப்புகளில் பணியாற்றி வருகிறார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடுமையான பேரழிவுகளை சரி செய்யவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு ரூ.37 ஆயிரத்து 907 கோடியே 19 லட்சம் பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என 08.01.2024 அன்று தமிழ்நாடு முழுவதும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

பென்னாகரம் நகரில் பேருந்து நிலையம் அருகில் இருந்து, இந்தியன் வங்கி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த செல்லும் போது, வழியில் பா.விஜயபாரதி திடீரென சரிந்து விழுந்தார். அவரை உடனடியாக பென்னாகரத்தில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு அழைத்து செல்லப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சிகிச்சை பயனின்றி, அவருக்கு ஏற்பட்ட கடுமையான மாரடைப்பால் காலமானார். துடிப்பான செயல்பாட்டாளரை கட்சி இழந்து விட்டது.

காலமான பா.விஜயபாரதிக்கு காந்திமதி என்ற மனைவியும், ஸ்ரீமதி, பூஜா என்ற இரு மகள்களும், ஒரு மகனும் இருக்கிறார்கள்.

அன்னார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை இழந்து வாடும் அவரது மனைவி, குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஏஐடியூசி துவக்கம்

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஒன்றியம் மின் ஒலி ஒளி அமைப்பாளர்களின் சங்க துவக்க விழா ஏஐடியூசி சங்கப் பெயர் பலகை திறப்பு விழா சங்கத் தலைவர் பரகத் அலி தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் வி.முனியாண்டி, பொருளாளர் ஜி.ஜெகன்நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்கத்தின் சங்கப் பலகையை மாவட்ட ஏ ஐ டி யூ சி மாவட்ட பொதுச் செயலாளர் என் கே ராஜன் திறந்து வைத்தார். உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் பி சண்முகராஜன் பங்கேற்றார்.

கௌரவ தலைவர் எம் ராஜீவ் காந்தி நன்றி கூறினார்.

### டாஸ்மாக் பணியாளர்கள் பணி நிரந்தரம்

# காத்திருப்புப் போராட்டம்: பொதுக்குழு முடிவு



தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் (ஏஐடியூசி) மாநில செயற்குழுக் கூட்டம் 09.01.2024 மற்றும் 10. 01. 2024 தேதிகளில் சென்னையில் உள்ள தமிழ்நாடு ஏஐடியூசி அலுவலகத்தில் சங்கத் தலைவர் நா. பெரியசாமி (முன்னாள் எம் எல் ஏ) தலைமையில் நடைபெற்றது.

ஏஐடியூசி தேசிய செயலாளர் டி.எம். மூர்த்தி, தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன், டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. தனசேகரன், பொருளாளர் கே. கோவிந்தராஜ், செயலாளர்கள் பி.எம். மணிகண்டன், சி. மாரி, ஆர் இளங்கோ, எஸ் மணிகண்டன், துணைத் தலைவர்கள் பி. பாலசந்தர், டீ.ராயப்பன் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சட்டமன்ற கூட்டத் தொடரின் போது காத்திருப்புப் போராட்டம்!

டாஸ்மாக் நிர்வாகத்தில் மதுபான சில்லறை விற்பனை பிரிவில் 25 ஆயிரம் பணியாளர்கள் கடந்த 20 ஆண்டுகளாக பகுதி நேர, ஒப்பந்த, தொகுப்பூதிய தொழிலாளர்களாக பணிபுரிந்து வருகிறார்கள் தமிழ்நாடு அரசின் பணி நிரந்தர சட்டப்படி இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணியாற்றிய பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். ஆனால், டாஸ்மாக் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் வைத்திருப்பது நியாயமற்ற



பணியாளர் நடைமுறையாகும்.

இந்த நிலையில் மாற்றம் ஏற்படுத்த டாஸ்மாக் பணியாளர்களின் பணி நிரந்தரம். காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் சட்டமன்றக் கூட்டத் தொடர் காலத்தில் தலைநகர் சென்னையில் காலவரையற்ற காத்திருப்புப் போராட்டம் நடத்துவது என்று மாநில செயற்குழுக் கூட்டம் ஒரு மனதாக முடிவு செய்கிறது.

மத்திய தொழிற்சங்கங்கள், ஐக்கிய விவசாயிகள் முன்னணி இணைந்து ஒன்றிய அரசின் தொழிலாளர் விவசாயிகள் விரோத சட்டங்களை எதிர்த்து பிப்ரவரி 16 நடத்தும் போராட்டத்தை தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏ.ஐ.டி.யூ.சி. ஆதரிக்கிறது.

பிப்ரவரி 16 போராட்டத்துக்கு ஆதரவு!

பாஜக ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து, மத்திய தொழிற்சங்கங்களும், ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் ஒருங்கிணைந்து நடத்தும் பிப்ரவரி 16 போராட்டத்துக்கு டாஸ்மாக் பணியாளர் சங்கம் ஆதரவு தெரிவித்துக் கொள்கிறது.

துறை சார்ந்த கோரிக்கைகள்!

1) கடந்த 20 ஆண்டுகள் கடந்து பணிபுரியும் டாஸ்மாக் பணியாளர்களை பணிநிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

2) 20 ஆண்டுகள் பணிபுரிந்த டாஸ்மாக் பணியாளர்கள் எந்தவித பணபலன்களும் இன்றி ஓய்வு பெறும் அவலநிலை உள்ளதை கருத்தில் கொண்டு, ஓய்வு பெறும் டாஸ்மாக் பணியாளர்களுக்கு ரூ10 லட்சம் வழங்க வேண்டும் .மாதந்தோறும் ஓய்வூதியம் ரூ10 ஆயிரம் வழங்க வேண்டும்.

3) காலி பாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் நீதிமன்ற உத்தரவு காரணமாக நிர்வாகம் செயல்படுத்தும் போது அதற்கென தனியாக பணியாளர்களை நியமித்து அமுல்படுத்த வேண்டும்.

4) தமிழக அரசு படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மதுகடைகளின் எண்ணிக்கையை குறைக்கும் அதே நேரத்தில் அந்த கொள்கைக்கு எதிராக மனமகிழ்மன்றங்கள் (திலி2) என்ற பெயரில் தனியார் மதுகடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதை உடனடியாக தமிழக கைவிட வேண்டும்.

5) மதுகடைகளுக்கு கிடங்கில் இருந்து மதுபானங்களை கொண்டு வந்து இறக்கி வைக்கும் கூலியை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

6) மதுபானகடைகளில் பணிபுரியும் பணியாளர்களை மதுகூடங்களில் ஏற்படும் தவறுகளுக்கு பொறுப்பாக்கி நடவடிக்கை எடுப்பதை கைவிட வேண்டும்.

7) பல்வேறு குறைபாடு காரணமாக மீண்டும் பணி வழங்கபட்ட சுமார் 1400 பணியாளர்களுக்கு பணி வழங்கியதை தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏ.ஐ.டி.யூ.சி. வரவேற்கிறது.

8) சுமார் 400 க்கும் மேற்பட்ட பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் இவர்களின் குடும்ப சூழலை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உடனடியாக மீண்டும் பணி வழங்க வேண்டும்.

9) டாஸ்மாக் பணியாளர்கள் ஓய்வு பெறும் வயதை அரசு பணியாளர்களை போன்று 60 ஆக உயர்த்த வேண்டும்.

10) டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரிந்து இறந்த பணியாளர் குடும்ப உறுப்பினர்களுக்கு கருணை அடிப்படையில் அரசின் பிற துறைகளில் பணி வழங்க வேண்டும்.

11) டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சமூக விரோதிகளிடம் இருந்து உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தலித் மக்களுக்கு பாதையுடன் கூடிய சுடுகாடு ஏற்படுத்த வேண்டும்!

**வி.தொ.ச. கோரிக்கை!**



திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காடு ஒன்றியம் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய பேரவை டாக்டர் சி. சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. பேரவை துவக்கி வைத்து மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன் உரையாற்றினார். மாவட்டத் தலைவர் டி. கே. ராஜா, மாவட்ட பொருளாளர் வி. சரவணன், மாவட்ட துணை செயலாளர் எம்.பி.குமார், கே.மதியழகன், மாவட்ட குழு உறுப்பினர் செங்குன்றம் மதி உள்ளிட்டோர் உரையாற்றினார்.

பேரவையில் திருவாலங்காடு ஒன்றிய தலைவராக டாக்டர் சி. சுப்பிரமணி, ஒன்றிய செயலாளராக பிரபாகரன், பொருளாளராக வி. இ. ராணி உள்ளிட்டோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர் . திருவாலங்காடு ஒன்றியம் புலிகுண்டா கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்களுக்கு முறையான சுடுகாடு மற்றும் இடுகாடு வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் புதைக்கவோ, எரிக்கவோ வேண்டி ஏற்படுகிறது. இதனால் வனத்துறையினருக்கும், கிராம மக்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. எனவே மாவட்ட நிர்வாகம் தலையிட்டு மேற்கண்ட கிராம மக்களுக்கு முறையான சுடுகாடு வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கோவையில் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழா



கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழா சூலூரில் நடைபெற்றது. ஜனவரி 3 ல் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

ஆர்.வி.எஸ். கல்லூரி அரங்கத்தில் பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் வெ.சுப்பிரமணியன் தலைமையுரையாற்றினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் சுரேந்திரன் வரவேற்புரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி அறிமுகவுரையாற்றினார். மாநிலத் துணைத் தலைவர் எல்லை சிவக்குமார் பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரையாற்றினார்.

கவிஞர் தமிழ்ஒளியின் "பற்றுக்கோடு" எனும் சிறுகதையை நாடகவியலாளர் முனைவர் த.திலிப்குமார் குறுநாடகமாக இயக்க, ஆர்.வி.எஸ். கல்லூரி மாணவர்களின் பாராட்டுதலை பெற்றது.

நிகழ்வின் இறுதி நிகழ்ச்சியாக, பெருமன்றமும், ஆர்.வி.எஸ். கல்லூரியும் இணைந்து கலை இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏதுவாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. சித்ரா கண்ணன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். பெருமன்றத்தின் மாவட்டப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் நன்றி கூறினார்.

## சென்னை மாநகர நூலக ஆணைக்குழு தலைவருடன் சந்திப்பு



தமிழக அரசின் சென்னை மாநகர நூலக ஆணைக்குழு தலைவர் மனுஷ்யபுத்திரன், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் முனைவர் ஔவை அருள், தமிழக அரசின் பொது நூலகத்துறை இயக்குனர் திரு.இளம்பகவத்.இ.ஆ.ப. ஆகியோரை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பாக மருத்துவர் த.அறம் உள்ளிட்ட மன்றத்தினர் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.

### ஸ்ரீவில்லிபுத்தூர்

# சிபிஐ ஒன்றிய செயலாளர் தாயார் மறைவு

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் ச.பலவேசம் அவர்களது தாயார் கோவிந்தம்மாள் (91) வயது மூப்பின் காரணமாக முத்துவிங்கபுரத்தில் காலமானார். அவரது கணவர் சட்டமுத்து ஏற்கனவே காலமாகி விட்டார். தகவலறிந்து தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்எம்பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், இடைக்கமிட்டி செயலாளர்கள் கோவிந்தன், சக்கனன், நடராஜன் , ஸ்ரீவில்லிபுத்தூர் நகர செயலாளர் மூர்த்தி உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

## இந்த வார தம்பிக்குறள்

**147. அனுபோக அறிவு**

**அனுபோக ஆய்வ தறிய அறிவாகும்**
**அன்றஃதே ஆன்ற அறிவு.**

பட்டறிவால் பெறும் அறிவே சிறந்த அறிவாகும். அப்படியல்லாமல் (கல்வி அறிவு போன்ற) ஏட்டறிவு சிறந்த அறிவாகாது.

**ஆற்றியோன் ஆற்றிய ஆங்கேபின் ஆற்றுதல்**
**ஏற்ற இயலறி வன்று.**

ஏற்கனவே பட்டறிந்து செயல் புரிந்தோன் அறிவை அப்படியே பின்பற்றிச் செய்தல் நல்ல அறிவாகாது. தானும் பட்டறிந்து செயல் படவேண்டும்.

# வள்ளுவர் சனாதன துறவியா? சங்கிகளின் பெரும் மோசடி



வ.மணிமாறன்

**திருவள்ளுவர் எந்த மன்னரையும் பாடவில்லை. எந்த அரசவையிலும் கவிஞராக இல்லை. ஏறத்தாழ 2 ஆயிரம் ஆண்டுகளாக தமிழ் மக்களால் போற்றப்படுகிறார்.**



திருக்குறள் இந்திய மற்றும் சர்வதேச அளவில் 43 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில்மட்டும்54மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன. திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பாலை மட்டும் இலத்தீன் மொழியில் 1730 ஆம் ஆண்டு வீரமாமுனிவர் மொழிபெயர்த்தார். ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

தற்போது செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பாக 58 பழங்குடியின மொழிகள் உட்பட 120க்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின், தமிழின் அடையாளமாக திருவள்ளுவரும் திருக்குறளும் உயர்ந்து நிற்கிறது.

இதனால், அவரவருக்குப் பிடித்தமானதை வள்ளுவத்தின் மேல் ஏற்ற முனைகின்றனர்.

*திருவள்ளுவர் சமணர்.

*அவர் சைவ சித்தாந்தி.

*இல்லை, புத்த சமயத்தவர்.

*திருவள்ளுவர் வைணவர்.

*இல்லை, ஆசீவகர்.

இந்த வரிசையில் தற்போது சேர்ந்திருப்பவர்கள் ஆர்.எஸ்.எஸ் சனாதனிகள். வள்ளுவருக்கு திருநீறு பட்டை போட்டு, காவி உடை உடுத்தி விட்டுள்ளனர். "பாரத சனாதனத்தின் பழமையான ரிஷி" என்று வேறு பட்டம் சூட்டியுள்ளனர்.


இப்பணியை செய்பவர்களில் ஆளுநர் ஆர்.என்.ரவியும் சேர்ந்துள்ளார். தான் வகிக்கும் பதவி, அரசியல் அமைப்பு சட்டப் பொறுப்பு என எதைப் பற்றியும் அவருக்கு கவலையில்லை. ஆர்.எஸ்.எஸ். கொள்கையை பரப்ப வேண்டும். இந்துத்துவ அரசியலை பேச வேண்டும். அதற்கு வழி கிடைக்குமா? என்பது பற்றி மட்டும் சிந்திப்பவர். இந்த ஆண்டு திருவள்ளுவர் தினத்திலும் அதையே செய்துள்ளார்.

நெற்றியில் திருநீறும் காவி உடையும் அணிந்ததிருவள்ளுவர் படத்திற்கு ஆளுநர் ஆர்.என்.ரவி மரியாதை செலுத்தினார். அந்தப் படத்துடன், வாழ்த்துகளைத் தெரிவித்தும் அவர் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு: "திருவள்ளுவர் தினத்தில், ஆன்மிக பூமியான நமது தமிழ்நாட்டில் பிறந்த பெரும்புலவரும், சிறந்த தத்துவஞானியும் பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவியுமான திருவள்ளுவருக்கு எனது பணிவான மரியாதையை செலுத்துகிறேன். அவரது ஞானம் நமது தேசத்தின் சிந்தனை மற்றும் அடையாளத்தை வடிவமைத்து, வளப்படுத்தி ஒட்டுமொத்த மனித குலத்துக்கு வழிகாட்டியாகவும் உத்வேகத்தின் ஆதாரமாகவும் நீடிக்கிறது. இந்த புனிதமான நாளில், அனைவருக்கும் எனது அன்பான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்".

இந்த வாழ்த்துச் செய்திக்குள் எத்தனை விஷமம். எத்தனை நஞ்சு.

இதனைக் கண்டு தமிழ்நாட்டின் வரலாற்றையும் தமிழர்களின் பண்பாட்டையும் அறிந்தவர்கள்; திருக்குறளை கற்றவர்கள் கொந்தளிக்கின்றனர். தமிழர்களின் அடையாளத்தை வசமாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன், நினைத்தபடி எல்லாம் திரிப்பதா? அதற்கு அளவே இல்லையா? திருவள்ளுவர், சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவியா? எவ்வளவு பெரிய மோசடி இது.





திருக்குறளில் "திருவடி" என்ற சொல் வருகிறது. "எண்குணத்தான்" என்ற சொல் இடம்பெற்றிருக்கிறது. இதனால், சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி என்று வாதிடுகின்றனர்.

திருக்குறளில் "இறைவன்" "பிறவிப் பெருங்கடல்" என்ற சொல் வருகிறது. "இந்திரனே சாலும் கரி" என்ற சொல் இடம்பெற்றிருக்கிறது. இதனால், சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி என்று வாதிடுகின்றனர். திருவள்ளுவரை அப்படிச் சொல்ல முடியுமா? அது சரியானதா?



குருடர்கள் யானையைப் பார்த்த கதை என்று சொல்வார்களே, அதைப் போன்று தான், வள்ளுவருக்கு "சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி" என ஆளுநர் ஆர்.என்.ரவியும் சங்பரிவாரமும் முத்திரை குத்தி இருப்பது.

கடைச் சங்கப் புலவர் நக்கீரர் "திருமுருகாற்றுப்படை" எழுதியுள்ளார். அது சமயநூல். அதை அவரே வெளிப்படையாகச் சொல்கிறார். வள்ளுவரும் இது போன்ற சமய நூலைப் படைக்க நினைத்திருந்தால், சமயக் கோட்பாட்டை, அதன் கதைகளை விளக்கி இருப்பார். திருக்குறளில் அப்படி எதுவும் இல்லை.

வள்ளுவர் எழுதியது சமய நூலும் அல்ல. அவர் "சனாதன பாரம்பரியத்தின் துறவி"யும் அல்ல. அவர் எழுதியது அறம்; பொருள்; இன்பம் பற்றிய நூல்.

வள்ளுவரின் காலத்தில், அன்றைய சமூகத்தில், எப்படி இருந்ததோ அதனைப் பதிவு செய்திருக்கிறார். இலக்கியம் காலத்தையும் சமூகத்தையும் காட்டும் கண்ணாடி. அது திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் பொருந்தும் தானே. இந்த எடுத்துக்காட்டுகள் அப்படி இடம்பெற்றவைதான்.

### சனாதனமும் திருவள்ளுவரும்

சனாதனத்தின் புனித நூல் தொகுதிகளில் ஒன்று ஸ்மிருதி. வேதங்களைப் போன்றே ஸ்மிருதிகளும் குறிப்பிட்ட காலம் வரை வாய்மொழியாகவே வழங்கியுள்ளன.

"தர்ம சாத்திரங்கள், நித்ய கருமங்கள், ஆசாரம், விவகாரம், பிராயசித்தம், இராசதர்மம், வருணாசிரமம் போன்றவற்றை சொல்லக் கூடியவையே" ஸ்மிருதி என்கின்றனர்.

இந்த ஸ்மிருதிகள் தோன்றிய சமூக அமைப்பை ஒத்ததாகவே திருக்குறள் தோன்றிய சமூக அமைப்பும் இருந்தது.

### அரசன் குறித்து ஸ்மிருதியும் வள்ளுவரும்

அரசு என்பது கடவுளால் படைக்கப்பட்ட தெய்வீகமான அமைப்பாகும். அரசனுடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்த யாருக்கும் உரிமையில்லை. அவனது கட்டளைக்கு அனைவரும் கீழ்ப்படிய வேண்டும். அரசனிடம் குடிமக்கள் தாழ்ந்து பணிந்து போக வேண்டும். அதுதான் அவர்களின் தெய்வீகக் கடமை என்று ஸ்மிருதிகள் வலியுறுத்துகின்றன. இது குறித்து சுக்கிர நீதி, நாரத ஸ்மிருதி, மனு ஸ்மிருதி (மனு தர்மம்) போன்றவை விரிவாகப் பேசுகின்றன.

அரசனை 'இறை' என்ற சொல்லால் வள்ளுவரும் சுட்டுகிறார். அரசனின் சிறப்பைக் கூறும் 'இறைமாட்சி' என்ற அதிகாரமும் வைத்துள்ளார்.

மன்னனுக்கு இருக்க வேண்டிய படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறு உறுப்புகளைக் குறிப்பிடுகிறார். அரசன் அறவழி நிற்பவனாகவும், பொருளை ஈட்டி அதை பாதுகாத்துப் பகுத்தளிக்கும் ஆற்றல் உடையவனவாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.

**"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"** (386)

என்றும் வலியுறுத்துகிறார். இப்படி மக்களின் கண்ணோட்டத்தில் இருந்தே மன்னனைப் பார்க்கிறார் வள்ளுவர். இது ஸ்மிருதிகளின் கண்ணோட்டத்திற்கு மாறானது. எதிரானது.

### மன்னனின் கடமை:

இந்தியாவில் மன்னர்களின் வழக்கமான கடமைகளுடன், வேறுபாடான ஒரு கடமையையும் நிறைவேற்ற வேண்டும். அதாவது சாதிய, வருண பாகுபாடுகளைப் பாதுகாக்கும் கடமையை மன்னர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையே சனாதனமும் ஸ்மிருதிகளும் வலியுறுத்தின.

ஆனால், திருக்குறளில் அரசனும் குடிமக்களும் வருண, சாதிய அடையாளங்கள் இன்றியே காட்சியளிக்கின்றனர். மன்னனின் வருணம் குறித்தும், வருணக் கலப்பு ஏற்படாமல் பாதுகாக்கும் கடமை குறித்தும் திருக்குறள் எதுவும் பேசவில்லை.

சனாதனம், ஸ்மிருதிகளில் இருந்து திருக்குறள் மாறுபடும் முக்கிய பகுதி இது.

### மகளிர் உடமைப் பொருளா?:

அரசன் போரில் வெற்றி பெற்றால், அவனுக்கு உரிமையாகும் பொருட்களில் ஒன்றாகப் பெண்ணைக் குறிப்பிடுகிறது மனு ஸ்மிருதி. (7:96)

ஆனால், வள்ளுவர் இதனைக் கண்டிக்கிறார். மன்னனும், அவனுடைய படையும் அது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என அறிவுறுத்துகிறார்.






### சிறப்புரிமைகள்:

நான்கு வருணப் பாகுபாட்டை வலியுறுத்தும் ஸ்மிருதிகள், அவற்றில் முதன்மையான வருணமாகவும், சிறப்புரிமை உடைய வருணமாகவும் பார்ப்பனர்களைக் குறிப்பிடுகின்றன.

பார்ப்பனர்களுக்கு கொடை வழங்க வேண்டும், தண்டனைகளில் பாகுபாடு காட்ட வேண்டும் என மனுஸ்மிருதி வலியுறுத்துகிறது. ஆனால், வள்ளுவர் வருணப்பாகுபாட்டை வலியுறுத்தவில்லை. எந்தப் பிரிவினருக்கும் சிறப்புரிமை வழங்கவில்லை.

### சாதி மேலாண்மைக்கு எதிர்ப்பு

சிறப்புரிமை பெற்ற வருணப் பிரிவினரான பார்ப்பனர் உழவுத் தொழிலை மேற்கொள்ளக் கூடாது என்கிறது மனுஸ்மிருதி.

ஆனால், உழவுத் தொழிலின் மேன்மையை வலியுறுத்தி 'உழவு' என்ற அதிகாரம் திருக்குறளில் உள்ளது. உழவையும் அதை மேற்கொள்வோரையும் போற்றுவதன் மூலம் மனுஸ்மிருதியின் சாதிய மேலாண்மைக் கருத்துடன் வள்ளுவர் முரண்படுகிறார்.

நான்கு வருணங்களும் தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளை முறையாகச் செய்ய வேண்டும் என்பது ஸ்மிருதிகள் சொல்லும் விதிமுறை. ஆனால் வருணங்கள் குறித்தோ அவற்றுக்குரிய கடமைகள் குறித்தோ திருக்குறள் எதுவும் பேசவில்லை.

ஆர்.எஸ்.எஸ் மற்றும் சங் பரிவார் பேசும் சனாதனம், வேதம், ஸ்மிருதி போன்றவற்றுக்கு எதிரான கொள்கை உடையவர் திருவள்ளுவர். அவரை "பாரதிய சனாதன பாரம்பரியத்தின் துறவி" என்பது பெரும் மோசடி. தீக்குறள் என பழித்து வந்தவர்களின் இன்றைய வாரிசுகள், திருக்குறள், திருவள்ளுவர் பற்றிபேசுவது உறவாடிக் கெடுக்கும் உத்தி. விழிப்போடு இருப்போம். சனாதன வருண தர்மத்துக்கு எதிரான வரலாற்றுப் போரை முன்னெடுப்போம்.

தொடர்புக்கு: 9500001224

# 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம்: ஜனநாயகப் படுகொலை

## ஏஐடியுசி பொதுக்குழு கூட்டத்தில் இரா.முத்தரசன் உரை

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் தமிழ்நாடு ஏஐடியுசியின் செங்கம் பள்ளி அமைப்பு நிலை மாநாட்டு முடிவுகளும், அனைத்து நிலைகளிலும் அதனை அமல் படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து முடிவெடுப்பதற்கான சிறப்பு பொதுக்குழு கூட்டம், 2024 ஜனவரி 2 ,3, 4 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றது. மாநிலத் தலைவர் எஸ். காசி தலைமையில் கட்டட சங்கத்தின் அகில இந்திய தலைவர் கே. இரவி கொடியேற்றினார். அதன் பின்பு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட பொதுச் செயலாளர் எம். ஜஹாங்கிர் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். மாநில செயலாளர் சி. சந்திரகுமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். தேசியச்செயலாளர் டி.எம். மூர்த்தி அறிமுக உரையாற்றி துவக்கி வைத்தார்.

மாநில பொதுச் செயலாளர் எம்.ராதா கிருஷ்ணன் அமைப்பு நிலை முடிவுகளை அமலாக்குவதில் உள்ள தயக்கங்கள், அதன் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்த அறிக்கை முன்வைத்து உரையாற்றினார். அதன்மீது ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்தனர். முதல் நாள் கூட்டம் தேசிய துணை தலைவர் கே .சுப்புராயன் எம்.பி. உரையுடன் நிறைவு பெற்றது.

மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலகம் அருகில், மக்கள் விரோத, தொழிலாளர் விரோத ஒன்றிய மோடி அரசை ஆட்சியை விட்டு அகற்றவும், நாடாளுமன்ற ஜனநாயக படுகொலையை கண்டித்தும் பொது கூட்டம் மாவட்ட பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பரப்புரை செயலாளர் ஜி.ஜெகதீசன் வரவேற்புரை ஆற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஆர். முத்தரசன் சிறப்புரையாற்றினார் . தேசிய துணை தலைவர் கே. சுப்பராயன் எம்.பி, தேசிய செயலாளர் டி.எம். மூர்த்தி, மாநிலத் தலைவர் ஆர்.காசி விஸ்வநாதன், பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், மாவட்டத் தலைவர் எம். சங்கையா, கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ. ராஜ் குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இரு நாட்களில் நடைபெற்ற பயிற்சி பயிலரங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கருத்துருக்கள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் அமைப்பு நிலை முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான கால அளவினை நிர்ணயித்து சமர்ப்பித்த முடிவுகளை சிறப்பு பொது குழு முழுமையாக ஏற்றுக் கொண்டு உறுதியாக செயல்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இப்போது குழு கூட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் மேடையில் பாராட்டுக்கள் தெரிவித்து கௌரவிக்கப்பட்டார்கள்.












### பொதுக்கூட்டத்தில் இரா.முத்தரசன் பேச்சு!

ஒன்றிய அரசின் செயல்பாடுகளை எதிர்த்து தொழிலாளர் , விவசாய சங்கங்களின் பொது வேலை நிறுத்தம் வெற்றி பெற ஆதரவு அளிக்க வேண்டும். தமிழ்நாடு ஏஐடியுசி பொதுக்குழுவையொட்டி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இரா. முத்தரசன் பேசியதாவது.

தமிழ்நாடு ஏஐடியுசி சிறப்பு பொதுக்குழு கூட்டம் 2024 ஜனவரி 2, 3, 4 ஆகிய மூன்று தினங்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் மாமல்லபுரத்தில் நடைபெற்றது. பேரூராட்சி அலுவலகம் அருகில் மாவட்ட பொதுச்செயலாளர் எம் ஜஹாங்கீர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் சிறப்புரையாற்றினார். ஏஐடியுசி இந்திய சுதந்திரத்திற்காகவும் தொழிலாளர்களுக்கான மக்களுக்கான உரிமைகளுக்காக பல்வேறு தியாகங்களை செய்த சங்கமாகும். பல தோழர்களின் தியாகத்தால் வளர்ந்த அமைப்பாகும் தொடர்ச்சியான போராட்டங்களை இன்று வரை நடத்திக் கொண்டிருக்கிறது.

ஒன்றிய அரசானது பாசிச, சர்வாதிகார அரசாக மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால் மக்களை பிளவு படுத்தி அடுத்த முறை ஆட்சிக்கு வர முயற்சிக்கிறது. ஏ ஐ டி யு சி பொதுக்குழு கூட்டம் இந்திய அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் அதன் மக்கள் விரோத, தொழிலாளர்கள் விரோத, விவசாயிகள் விரோத கொள்கைகளை எதிர்த்தும், தொழிலாளர்கள், விவசாயிகள் ஒன்றிணைந்து அனைத்து சங்கங்களின் பொது வேலை நிறுத்தத்திற்கு திட்டமிடல் கூட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை முழுமையாக நிறைவேற்றி விடவும் அதனை வெற்றி பெற செய்திடவும் அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் .

மோடி அரசு 2014 , 2019 ஆகிய இரண்டு தேர்தலிலும் கொடுத்த வாக்குறுதிகளை இன்று வரை நிறைவேற்றவில்லை . விலைவாசியை குறைப்போம் என்றார்கள் குறைக்கவில்லை..வெளிநாட்டில் இருக்கக்கூடிய கருப்பு பணத்தை கொண்டு வந்து ஒவ்வொருவருக்கும் 15 லட்ச ரூபாய் வங்கியில் போடப்படும் என்றார்கள்.போடப்படவில்லை. ஆண்டிற்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவோம் என்றார்கள் பல கோடி பேர் வேலையை இழந்து உள்ளார்கள் .

இலங்கை ராணுவத்தால், கடற் கொள்ளையர் களாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் பெரும் பாதிப்புக்கும் இன்னலுக்கும் உள்ளாகி வருகிறார்கள் . இந்திய கடற்படை அதனை தடுக்கவில்லை. இன்று வரை தமிழக மீனவர்களின் 146 படகுகள் திருப்பித் தரப்படாமல் இலங்கை வசம் உள்ளது. அதனை மீட்டு கொண்டுவர எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழக மீனவர்கள் மீது அக்கறை இல்லாத அரசாக ஒன்றிய அரசு செயல்படுகிறது.

மூன்றடுக்கு பாதுகாப்பை தாண்டி நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று கூறியதற்காக 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் . மிகப்பெரிய ஜனநாயக படுகொலை. நாடாளுமன்றத்திற்கு வந்த இளைஞர்களுக்கு பரிந்துரை வழங்கியது மைசூர் தொகுதியை சார்ந்த பிஜேபி எம்பி அவர் மீது எவ்வித நடவடிக்கையும் இதுவரை இல்லை.

இதுவே இந்திய கூட்டணியை சார்ந்த இந்திய கூட்டணியில் உள்ள ஏதாவது ஒரு கட்சியை சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் அவரை வாழ்நாள் தடை செய்து இருப்பார்கள். அதுபோல குதித்த இளைஞர்கள் இஸ்லாமியராக இருந்தால் அவர் தீவிரவாதி என கூறி கொல்லப் பட்டிருப்பார்கள்.

தமிழ்நாடு பாதிக்கப்பட்டு பேரிழப்பிற்கு உள்ளானது. இதனை பேரிடர் பாதித்த மாநிலமாக அறிவித்து ரூபாய் 21,000 கோடி நிதி வழங்க வேண்டும் என்று மாநில முதலமைச்சர் பிரதமரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்த போதும் இதுவரை ஒற்றைக் காசு கூட கொடுக்கப்படவில்லை. ஒன்றிய அரசனது தமிழகத்தை மாற்றாந்தாய் கண்ணோட்டத்துடன் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஜனநாயக விரோத ஒன்றிய அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஜனநாயகம், மதச்சார்பின்மை, அரசியலமைப்பு சட்டங்கள், பொதுத் துறைகள் எதுவும் இருக்காது . பிஜேபி இல்லாத அரசு ஆட்சிக்கு வந்தால் மட்டுமே இந்தியாவை பாதுகாக்க முடியும். அதற்காக இந்திய கூட்டணி வெற்றி பெற செய்வோம் என்று பேசினார்.

# புதுக்கோட்டையில் குடிமனை பட்டா கோரி ஆர்ப்பாட்டம்

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூர் கிராமத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள். குடியிருந்து வருகின்ற இடத்திற்கு தொடர்ந்து குடிமனை பட்டா கோரி வருகின்றனர். பட்டா கொடுக்க அதிகாரிகள் அலட்சியம் காட்டுகின்றனர்.

அதே நேரத்தில் மாத்தூர் கிராமம். சர்வே எண் 206/10 ல் இந்து, முஸ்லீம், கிறிஸ்துவர்களால் பயன்படுத்தப்படும் பொது சுடுகாடு மயான இடத்தை 5 தனிநபர்களுக்கு பட்டா வழங்கியதை கண்டித்தும், பட்டாவை ரத்து செய்யக்கோரியும், பட்டா வழங்கியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி, எஸ். ராமச்சந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் அ.பாஸ்கர், மாநில குழு உறுப்பினர் எஸ். நடராஜன், ஏ. ரங்கராஜ், மாவட்ட செயலாளர் தர்மராஜ், சின்னத்துரை, ஏழுமலை உள்ளிட்டோர் பேசினார்கள். ஆண்கள் பெண்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

# போக்குவரத்து தொழிலாளர் போராட்டத்தை சொந்த அரசியல் லாபத்துக்கு பயன்படுத்தக்கூடாது

## சிஐடியுவின் அவதூறுக்கு ஏஐடியுசி பதில்

போக்குவரத்து கழக தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் உயர்நீதிமன்ற தலையீட்டின் பேரில், பொங்கல் விழாவையொட்டி மக்களின் போக்குவரத்து தேவைகளை நிறைவு செய்யும் முறையில், தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிஐடியு தலைவர் தோழர் ஏ சவுந்தரராசன் அவர்கள் அளித்த ஒரு பேட்டியில், ஏஐடியூசி தலைவர் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்றும், அரசியல் பேசி ஒரு குழப்பத்தை ஏற்படுத்த முயன்றதாகவும், ஆனால் ஏஐடியுசி சார்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலும் மறியலிலும் பங்கேற்றதாகவும் கூறியிருக்கிறார்.

இது ஒரு வடிகட்டியப் பொய். இதற்கு விளக்கம் அளிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்படுகிறது.

போக்குவரத்து கழகங்களில் செயல்படும் அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு என்ற பெயரில் AITUC, CITU, INTUC, HMS, TTSF, MLF, DWU ஆகிய சங்கங்கள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தி இருந்தோம். கூட்டாக வேலை நிறுத்த முன்னறிவிப்பு கொடுத்தோம். அதிமுகவைச் சேர்ந்த அண்ணா தொழிற்சங்க பேரவை இந்த கூட்டமைப்பில் இல்லை. அது தனியாக செயல்பட்டுக் கொண்டிருந்தது.

> தொலைக்காட்சி பேட்டியில் விளக்கிய சிஜடியு தலைவர், “நாங்கள் என்ன கல்யாணமா நடத்துறோம், அவர்களாகவே வர வேண்டியதுதானே” என்று சொல்லி, தகவல் சொல்லவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். கூட்டம் நடத்த முயற்சி எடுப்பவர்கள், அதில் பங்கேற்க வேண்டியவர்களுக்கு தகவல் கூட சொல்ல முடியாது என்று மறுப்பது என்ன வகையான அணுகுமுறை?

பேச்சுவார்த்தையில் தீர்வு ஏற்படாததால் ஜனவரி ஒன்பதாம் தேதி வேலை நிறுத்தத்தை துவக்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த கோரிக்கைகள் அனைத்தும் பத்து ஆண்டுகளாக நிலுவையில் உள்ளவை ஆகும். அஇஅதிமுக அரசு 10 ஆண்டுகளாக இதில் தீர்வு காண முன்வரவில்லை. தொழிலாளர்களின் உரிமைகளை பறிப்பதிலேயே குறியாக இருந்தது. அப்போதெல்லாம் அண்ணா தொழிற்சங்கம் தனது கட்சி அரசுடன் சேர்ந்து நின்று அதன் நிலையை நியாயப்படுத்தியது மட்டுமல்ல, போராட்டங்களை வலுவிழக்கச் செய்யவும் பெரு முயற்சி எடுத்தது.

தற்போது தொழிலாளர்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தை தனது சொந்த அரசியல் லாபங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள அதிமுக முயற்சிக்கிறது. அதனோடு சேர்ந்து கூட்டாக செயல்படுவது பொருத்தமானது அல்ல என்று சங்கங்கள் கருதின.

தொழிலாளர் உரிமைகளுக்கும் பொதுமக்களின், தேசத்தின் நலன்களுக்கும் விரோதமான



கொள்கைகளைக் கொண்ட மோடி ஆட்சி இந்தியாவில் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது அதனை மாற்றி அமைக்க வேண்டியது சமூகத்தின் துடிப்பு மிக்க பகுதியான தொழிலாளர்களின் கடமையும் ஆகும்.



இதனை புறம் தள்ளி விட முடியாது.

**ஆனால் சிஐடியு – ஏடிபி சங்கங்களின் கூட்டமைப்பு என்ற பெயரில் வேலை நிறுத்த சுவரொட்டிகள் தமிழ்நாடு முழுமையிலும் ஒட்டப்பட்டன. ஏடிபி, சிஐடியு தலைவர்கள் கூட்டாக சேர்ந்து பேட்டிகள் கொடுக்கத் தொடங்கினர். மாவட்டங்களில் ஏடிபி அலுவலகத்தில் கூட்டமைப்பு கூட்டங்களை நடத்த துவங்கினர். இவை அனைத்தும் பொதுவெளியில் நடந்து கொண்டிருந்தன.**

**இது பற்றி நேரில் சிஐடியு தலைமையுடன் எடுத்துச் சொல்லியும், அதனை அலட்சியப்படுத்தி விட்டு தன் வழியில் செல்லவே முயன்றனர். மேலும் சிஐடியு தலைவர் முடிவெடுத்துவிட்டால், மற்ற சங்கங்கள் வாய் பேசாது அவர்களை பின்தொடர வேண்டும் என்ற மேலாதிக்க அணுகுமுறையை கையாண்டனர்.**

**எனவே ஏடிபி சங்கத்தோடு இணைந்து செல்லும் முயற்சியை கைவிட வேண்டும் என்று முறையிட்டு ஏஐடியூசி, எச்எம்எஸ், ஐஎன்டியுசி சங்கங்கள் ஒரு அறிக்கையை வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டது.**

இதற்குப் பின் சிஐடியு சம்மேளன பொதுச் செயலாளர் தொலைபேசியில் அழைத்து பேசியபோது, தமது சங்கமே தலைமை தாங்க தகுதியுள்ள சங்கம் போலவும், மற்றவர்கள் பின் தொடர வேண்டியவர்கள் என்பது போன்ற கருத்தை வெளியிட்டார்.

மேலும், 08.01.2024 அன்று மாலை கூட்டமைப்பின் கூட்டத்தை கூட்டிய அவர், அந்தக் கூட்டமைப்பின் அங்கமான ஏஐடியூசிக்கு தகவல் தெரிவிக்கவே இல்லை. இது என்ன வகைப்பட்ட ஜனநாயகம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

### கூட்டமைப்பின் தேவை!

தொலைக்காட்சி பேட்டியில் விளக்கிய சிஐடியு தலைவர், “நாங்கள் என்ன கல்யாணமா நடத்துறோம், அவர்களாகவே வர வேண்டியதுதானே” என்று சொல்லி, தகவல் சொல்லவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். கூட்டம் நடத்த முயற்சி எடுப்பவர்கள், அதில் பங்கேற்க வேண்டியவர்களுக்கு தகவல் கூட சொல்ல முடியாது என்று மறுப்பது என்ன வகையான அணுகுமுறை? மேலும் அழைக்கப்படாவிட்டாலும் தானாகவே கேட்டு தெரிந்து கொண்டு ஓடோடி வர வேண்டும் என்று அவரது பேச்சு அவர்களது மேலாதிக்கப் போக்கை மேலும் உறுதிப்படுத்துகிறது.

அதுமட்டுமில்லாமல் செய்திகளை பகிர்ந்து கொள்வதற்காக கூட்டமைப்பு வைத்திருந்த வாட்ஸ்அப் குழுவில் இருந்தும் ஏஐடியுசியை நீக்கிவிட்டார்கள். இதற்கு அவரிடம் என்ன பதில் இருக்கும் என்று தெரியவில்லை.

“இதுவரை போராட்ட களங்களில் இணைந்து நின்ற தோழமை தொழிற்சங்கங்களை விட்டுவிட்டு அரசியல் செய்ய அனைவருக்கும் போராட்ட நோக்கத்தை மாற்றிவிட வேண்டாம் என்று சிஐடியுவை தோழமையோடு கேட்டுக் கொள்கிறோம்” என்று தான் நமது அறிக்கை வலியுறுத்தியது.

ஆனால் ஏதோ போராட்ட களத்தை விட்டு ஒதுங்கிக் கொண்டது போலவும், ஆனால் அதையும் மீறி ஏஐடியுசி உறுப்பினர்கள் போராட்டங்களில் கலந்து கொண்டதாகவும் சிஐடியு கூறுவது அடிப்படையற்ற அவதூறு ஆகும்.

போராட்டத்தில் ஏஐடியுசி உறுப்பினர்களும் தலைமையும் உறுதியாக களத்தில் நின்றார்கள். மண்டல தலைமையகங்கள் மற்றும் பணிமனைகள் முன்பு முன்னணியில் நின்று போராட்டங்களில் ஈடுபட்டார்கள். மறியலில் தலைமையேற்று கைதானார்கள்.

ஏடிபியுடன் கூட்டாக இயங்கியதைப் பற்றி அந்த தொலைக்காட்சி பேட்டியில் செய்தியாளர் கேட்டார். அதற்கு, பேச்சுவார்த்தை முடிந்து வெளியே வந்த ஏடிபி – சிஐடியு தலைவர்கள் தற்செயலாக சந்தித்து பேட்டியில் சேர்ந்து நின்றதாகவும், பேசியதாகவும் சிஐடியு தலைவர் கூறினார்.

அப்படியானால் எமது அறிக்கை வெளியிடப்பட்ட பின்பு, அவர்கள் ஏன் தனித்தனியாக பத்திரிகையாளர்களை சந்தித்தார்கள், “தற்செயலாக” சந்திக்கும் நிலை ஏன் ஏற்படவில்லை என்பதை அவர்கள் தான் விளக்க வேண்டும்.

போராட்டத்தின் போது அரசியல் பேசி குழப்பம் விளைவிக்க முயல்வதாக ஏஐடியுசி மீது அவர் குற்றம் சுமத்துகிறார். அரசியலற்ற போராட்டம் என எதுவும் உள்ளதா? என அவர்தான் சொல்ல வேண்டும். தொழிலாளி வர்க்க அரசியலை முன்னெடுத்து செல்வதில் ஏஐடியூசிக்கு எந்தவித குழப்பமும் இல்லை; தெளிவாகவே உள்ளது.

தமிழ்நாடு அரசு இப்போதாவது போக்குவரத்து தொழிலாளர்களின் நியாயமான பிரச்சனைகளை தீர்வு செய்வதற்கு அக்கறையோடு முன்வர வேண்டும். அதற்கான சூழல் ஏற்படாவிட்டால் மீண்டும் போராட்டத்தை தொடர வேண்டிய நிலை ஏற்படும். ஒத்த கருத்து உடையவர்கள் அனைவரும், சங்கங்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்து, பொது முடிவு கண்டு ஒற்றுமையோடு களம் காண வேண்டியது அவசியம் என்று ஏஐடியுசி கருதுகிறது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **S.Shanmuganathan** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.